
Laodicean Times

லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு15 தொகுதி 3 ஜூலை - செப்டம்பர் 2025



R 5573

## ஆசீர்வாத மழைப்பொழிவு அங்கு இருக்கும்

THERE SHALL BE SHOWERS OF BLESSING

''என் பரிசுத்த பர்வதம் எங்கும்(இராஜ்ஜியம்) தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை'' – ஏசாயா 11 :9.

மனுக்குலம் முழுவதும் தவறான ஆட்சிக்கும் தவறான அரசாங்கத்துக்கும் அனைத்தும் பழக்கப்பட்டதால், தேவன் ஒரு நாள் பூமியில் ஏற்படுத்தப்படவுள்ள மேசியாவின் இராஜ்ஜியம் நல்ல நோக்கங்களையும் நல்ல உள்ளுணர்வுகளையும் உடையதாக மாத்திரமில்லாமல், அறிவு மற்றும் நியாயத்தீர்ப்பின் உயர்தரமான அதிகாரத்தை உடையதாய் இருக்கும் என்று இஸ்ரயேலுக்கு உறுதியளிக்கவேண்டியது அவசியமாய் இருக்கிறது. இதைத்தான் ஏசாயா தீர்க்கதரிசி சுட்டிக்காட்டினார், புதிய ராஜா தம்முடைய ஆசீர்வாதங்களை வழங்குவதிலும், தம்முடைய கண்டனங்களையும் சிட்சைகளையும் நிர்வகிப்பதிலும், தகவலின் பொதுவான வாய்க்கால்களை நம்பியிருக்கவேண்டிய அவசியம் இல்லை. மாறாக மனித சக்திக்கு அப்பாற்பட்ட அருட்கொடையை பெற்றிருக்கிறபடியால், இருதயத்தின் எண்ணங்களையும் உள்ளுணர்வுகளையும் அறிந்துகொள்வார். எவ்வளவு நல்ல உள்நோக்கம் கொண்டிருந்தாலும் பூமிக்குரிய ஆட்சியாளர்கள் எல்லாரும் செய்வதுபோல், காதுகேட்டபடியோ அல்லது கண் கண்டபடியோ தீர்ப்பு செய்வது அவருக்கு அவசியம்இல்லை (ஏசாயா 11: 3,4).

ஸ்தாபிக்கப்பட இருக்கிற தேவனுடைய ராஜ்ஜியம் முற்றிலும் நீதியானதும் பாரபட்சமற்றதுமாக இருக்கும் என்று இஸ்ரயேலரும், மற்ற எல்லாரும் அறிந்துகொள்ளவேண்டியது முறையானதாக இருந்தது. ஏனெனில் அவர்களின் ஞானமான சிறந்த ஆட்சியாளர்களும், சட்டம் இயற்றுபவர்களும், நீதிபதிகளும்கூட பெருமளவில் சுயநலத்தினால் ஆளப்பட்டனர் என்பதை அவர்களின் அனுபவங்கள் நிரூபிக்கின்றன. உலகின் பெரிய மனிதர்கள் தங்கள் ஆணைக்குட்பட்டவர்களின் உழைப்பில், செல்வத்தைக் குவித்திருக்கின்றனர். மேலும், பெரும்பாலும் தரித்திரர், உதவியற்றவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள் ஆகியோரது உழைப்பில், அவர்களது சிறப்பு நண்பர்களை செல்வந்தர்களாக்கி அவர்களுக்கு விசேஷித்த சலுகைகளை வழங்குகிறார்கள். எனவே பூமியின் புதிய ராஜா எல்லாருக்குமான சமத்துவத்தை வழங்குவார் என்றும், சாந்தமுள்ளவர்களும் பிற்படுத்தப்பட்டோரும், மிதமானவர்கள், தங்கள் உரிமைகளை நிலைநாட்டவும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தவும் வசதியில்லாதவர்கள் அவருடைய உதவியைப் பெறுவார்கள் என்றும், அனுதாபம் அல்லது இரக்கம் காட்டுவதற்கோ அல்லது ஊக்கமளிக்கவோ அல்லது உதவவோ வெகு சிலரையே பெற்றுள்ள தரித்திரர்கள், புதிய ராஜாவில் ஒரு நண்பரைக் கண்டடைவார்கள் என்றும் கர்த்தர் தீர்க்கதரிசிகள் மூலம் நமக்கு உறுதியளிக்கிறார்.

### ஆயிரமாண்டு, பரிணாம வளர்ச்சியின் மூலம் அல்ல

தற்போது நிலவுகிற சமூக ஒழுங்குமுறையின் கீழான தற்கால முயற்சிகளின் விளைவாக ஆயிரமாண்டு அரசாட்சி வரும் என்று எதிர்பார்க்கிறவர்கள், இந்த உலகம் பரிணாம வளர்ச்சியின் செயல்முறையினால் படிப்படியாக ஆயிரமாண்டை நெருங்கிக்கொண்டிருக்கிறது என்று நம்புபவர்கள், கர்த்தர் தம் தீர்க்கதரிசி மூலம் நம் ஆதார வசனம் மற்றும் அதன் சூழலில் காண்பிக்கப்பட்ட இந்த வார்த்தையை கவனமாக சிந்தித்துப் பார்க்கவேண்டும். அரசாங்கத்தின் ஆட்சிஅதிகாரத்தை மேசியா எடுக்கும்போது, அவரது முதற்படியாக, பூமியிலுள்ள சாந்தகுணம் உள்ளவர்களின் நலன்களுக்காக தரித்திரரை நியாயம்தீர்ப்பதும், ஐஸ்வரியவான்களை சமமான பங்கீட்டில் கண்டிப்பதுமாய் இருக்கும். ஒரு படிப்படியான செயல்முறையினால் சமமான பங்கீடு ஏற்கனவே மேலோங்கியிருக்கிறதென்றால், அதனால் எந்த தரித்திரரும்

## இம்மாத வெளியீட்டில்

.. ஆசீர்வாத மழைப்பொழிவு அங்கே இருக்கும் ... 1
.. தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டவர் ... 6
.. உயிர்த்தெழுந்த கிறிஸ்து ... 10
...புதுசிருஷ்டிக்கான சோதனைகள் விசித்திரமானவை ..13
...என் பிரசன்னம் உன்னுடன் செல்லும் – கவிதை ..16

*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

எந்த ஐஸ்வரியவான்களும் இல்லை என்றும், அதனால் எல்லாரும் சாந்த குணம் உள்ளவர்களாக மாறிஇருக்கிறார்கள் என்றும் இருந்தால், இது எப்படி சாத்தியமாக முடியும் ?

நம் கர்த்தர் தமது ஆளுகையின் துவக்கத்தில் செய்யவேண்டிய முதல்வேலை, அப்போது பரவியிருக்கும் தவறுகளை சரிசெய்வதற்காக இருக்கும் என்பதை ஏசாயா தீர்க்கதரிசியின் இந்த சாட்சியத்துடன் இசைவிலிருக்கும் மற்ற வேத வசனங்கள் காண்பிக்கின்றன. "மனுஷகுமாரன் வரும்போது பூமியில் விசுவாசத்தைக் காண்பாரோ" (லூக்கா 18:8) என்று நம் கர்த்தர் கேட்கும்போது, அவரது இரண்டாம் வருகையில், பூமியானது ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட நிலைமையில் இருப்பதிலிருந்து வெகுதொலைவில் இருக்கும் என்பதை அவர்தாமே சுட்டிக் காண்பிக்கிறார். வெளிப்படுத்தலை எழுதியவரும் இந்தப் பாடத்தின்மீது நிச்சயமான சாட்சியத்தைத் தருகிறார், அவர் : "ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின. ஜாதிகள் கோபித்தார்கள், அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது; மரித்தோர் நியாயத்தீர்ப்படைகிறதற்கும், தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உமது நாமத்தின்மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கும் பலனளிக்கிறதற்கும், பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கும் காலம் வந்தது என்றுசொல்லி, தேவனைத் தொழுதுகொண்டார்கள்" என்று கூறுகிறார்(வெளி 11: 15,18).

**வேதாகமம் இசைவும் நிலைத்தன்மையுமானது**

அநேக வேத வசனங்கள் ஒரே மாதிரியான முக்கியத்துவம் வாய்ந்தவை. வேதாகமத்தின் ஸ்தானம் முழுமையான இசைவுள்ளதும் சீரானதுமாக இருக்கிறது. பாவம் மேலோங்கி இருக்கிற இந்த தற்காலத்தை, "இப்பொழுதிருக்கிற பொல்லாத உலகம்" என்றும், இதில் "இந்த உலகத்தின் அதிபதி" ஆட்சிசெய்கிறான் என்றும், கிறிஸ்துவின் சரீரமாகிய ராஜ்யத்தின் சுதந்திரவாளிகளாயிருக்கும் கர்த்தருடைய உண்மை ஜனங்கள் "தீங்கு அனுபவிக்கிறார்கள்" என்றும் இந்த வேதாகமம் விவரிக்கிறது. மேலும் கர்த்தரால் அங்கீகரிக்கப்படுகிற ஒரு குண லட்சணத்தை உருவாக்க இந்த தீங்கு, அதை சரியாய் பயிற்சிசெய்கிறவர்களிடத்தில் வேலை செய்கிறது என்றும் அறிவிக்கிறது. இப்போது பாடுபடுகிற தேவனுடைய உண்மையுள்ள பரிசுத்தவான்களுக்கு மேசியாவுடன் உடன் சுதந்திரவாளிகளாக இருப்பதில் இந்த மகிமை நிறைந்த புதிய ராஜ்யம் அருளப்படும் என்றும் வேதவசனங்கள் குறிப்பிடுகின்றன. தேவதூதனால் தானியேல் தீர்க்கதரிசிக்கு அறிவித்ததுபோல், "வானத்தின் கீழெங்கும் உள்ள முழு ஆளுகை அவர்களுக்குக் கொடுக்கப்படும்(தானி 7:27). இந்த ஆளுகையை யேகோவா தேவன் "இந்தப் பிரபஞ்சத்தின் அதிபதியாகிய" சாத்தானிடமிருந்து பலவந்தமாகப் பிடுங்கி, அதை தம் குமாரனுக்குக் கொடுப்பார். அவருடைய மணவாட்டி, மணவாளனுடைய ராஜ்யத்தில் பங்குபெறுவாள். இந்த மாறுதல், இந்த தற்கால உலகத்தை, தற்கால சமூக ஒழுங்குமுறையை முடிவுக்கு கொண்டுவருகிற, "மகா உபத்திரவக் காலத்தில்" நிறைவேற்றப்படும்.

நம்முடைய பாடத்தின் சூழலில், "பூமியை தமது வாக்கின் கோலால் அடித்து தனது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரை சங்கரிப்பார்" என்று தீர்க்கதரிசி தொடர்ந்து கூறுகிறார்(ஏசாயா 11:4). அப்படியானால், ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் நேரத்தில் உதவி மற்றும் ஒத்தாசை தேவைப்படுகிற ஏழைகள் அங்கே இருப்பார்கள். அது மட்டுமல்ல, துன்மார்க்கரும் அங்கே இருப்பார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. மேசியாவின் வாக்கின்கோல் என்பது அவர் ஏற்கனவே வெளிப்படுத்திய நியாயத்தீர்ப்புக்களையும், அவை கிறிஸ்தவ மண்டலத்தால் பெரிதும் கவனிக்காமல் விட்டுவிட்டதையும் அடையாளப்படுத்துகிறது. "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயம்தீர்க்கிறது ஒன்று இருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனை கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்"(யோவான் 12:48). என்ற அவரது அறிவிப்பை நினைவில் கொள்வோமாக. அதாவது நியாயத்தீர்ப்பின் நாள் 1874இலிருந்து தற்போதுவரை இருக்கிறது. கிறிஸ்தவ மண்டலம் கர்த்தருடைய வார்த்தையின் நீதியை பொதுவாக ஏற்றுக்கொள்கிறது. ஆனால் அந்த வார்த்தையுடன் இசைவில் ஜீவிக்க முயற்சிக்கிறவர்கள் குறிப்பிடத்தக்க அளவு சிலராகவே இருக்கிறார்கள். இதன் விளைவாக "நியாயத்தை நூலாகவும் நீதியை தூக்கு நூலாகவும் வைக்கும்" நேரம் வரும்போது, இந்த நியாயத்தீர்ப்பு தேவனுடைய பெயரளவிலான வீட்டில் ஆரம்பிக்கும்போது, பெயரளவிலான அமைப்புக்கள் விழுந்துபோகும் – அதாவது அந்த வார்த்தையால் கண்டிக்கப்படும்.

கர்த்தருடைய சம்பத்துக்களாகிய உண்மையுள்ள சிலர் மாத்திரமே "உலகத்தின்மீது வரவிருக்கிறவைகளுக்குத் தப்பித்துக்கொள்ள தகுதியானவர்களாக எண்ணப்படுவார்கள்". அவர் தமது எதிரிகளை பழிவாங்கும்போதும், எஜமானின் சித்தத்தை அறிந்திருந்தும் அதை செய்யாதவர்களுக்கு கைம்மாறு செய்யும்போதும்; "அவர்(கர்த்தர்) தமது கோபத்திலே அவர்களோடு(உலகத்தோடு) பேசுவார், தமது உக்கிரத்திலே அவர்களைக் கலங்கப்பண்ணுவார்" என்று வேதத்தில் விளக்கப்பட்டுள்ளது. "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதில்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்(ரோமர் 12:19). "ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம் பண்ணினேன்; பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும். அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஒருமனப்பட்டு

அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக(message) மாறப்பண்ணுவேன்''(செப்பனியா 3:8,9). ''நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக்கச்சையுமாயிருக்கும்''(ஏசாயா 11:5). கச்சை இங்கு விழிப்பையும் ஊழியத்தையும் குறிப்பிடுகிறது. மேலும் இங்கு பறைசாற்றப்படுவது என்னவென்றால், மேசியா தேவனுடைய உண்மையுள்ள விழிப்புள்ள ஊழியக்காரனாக இருப்பார், நம்பி ஒப்படைக்கப்பட்டவைகள் எல்லாவற்றையும் அவரது பராமரிப்பில் செய்துமுடிப்பார் என்பதே ஆகும்.

**விலங்கு உருவாக்கத்தில் பெரும் மாற்றங்கள்**

ஏசாயா 10ம் அதிகாரத்தில்; ''ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக் குட்டியோடு படுத்துக்கொள்ளும், கன்றுக்குட்டியும் பாலசிங்கமும் காளையும் ஒருமித்திருக்கும்'' என்ற விலங்கு ராஜ்யத்தில் ஏற்படும் மனநிலை மாற்றத்திற்கான இந்த குறிப்புகள், எல்லாவற்றையும் திரும்பக்கொடுக்கும் காலங்களைப்பற்றிய பொதுவான வேதாகமக் குறிப்புக்களோடு முழு இசைவில் இருக்கிறது. மனுக்குலம் மீட்டெடுக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், அவனது ஆதிகால மனித பரிபூரண நிலைமைக்கும், தனது சிருஷ்டிகருடனான இசைவிற்கும் கொண்டுவரப்படுவான் என்பது மட்டுமல்ல, கிறிஸ்துவின் ஆளுகையினால் நிறைவேற்றப்படும் அந்த மீட்டெடுக்கப்படுகின்ற வரிசையில், கீழான விலங்குகளும்கூட ஆசீர்வாதத்தில் பங்குபெறும். தற்போது இது மிக சமீபத்திலிருக்கிறது என்று நாம் நம்புகிறோம்.

ஆதாமின் கட்டுப்பாட்டில் வைத்திருந்த விலங்குகள் காட்டுமிராண்டித்தனமானவை, கொடூரமானவை, மனிதனுடன் பகைமை கொண்டவை என்பதற்கான எந்த அறிவிப்பும் ஆதியாகமத்தின் விவரக்குறிப்பில் இல்லை. அதற்கு மாறாக அவைகள் தங்கள் பரிபூரண எஜமானுக்கு முழுமையாக கீழ்ப்படிந்தன என்பதே உட்குறிப்பாய் இருக்கிறது. இந்த இனம் மனிதனின் மரண தண்டனையின் சிதைக்கிற செல்வாக்கின்கீழ் இருக்கையில் ஆதிமனிதன் சிருஷ்டிக்கப்பட்டிருந்த தனது சிருஷ்டிகரின் சாயலை படிப்படியாக மேலும்மேலும் இழந்துவிட்டது. அதே சமயம், கீழான விலங்குகள் மீதான கட்டுப்படுத்தும் வல்லமையையும் அவர்கள் இழந்துவிட்டனர் என்று காரணத்தோடு நாம் யூகிக்கலாம்.

பரிபூரண ஆதாம் உடைமையாகப் பெற்றிருந்த வல்லமையின் தன்மை, விலங்கு சிருஷ்டிகளை கட்டுப்படுத்துவதற்கான விழுந்துபோன குறிப்பிட்ட சிலரின் உயரிய திறமையில், அபூர்வமான முறையில் இப்போதும் அடையாளம் காணப்படலாம். இவ்வாறு சில மனிதர்கள் காட்டு குதிரைகள்மீது மாத்திரமல்ல, மாறாக காட்டில் உள்ள கொடிய மிருகங்கள்மீதும்கூட தங்கள் மனஆற்றலையும் கட்டுப்பாட்டையும் செயல்படுத்தமுடியும் என்பதை நாம் காண்கிறோம். ஆதாம் பூமியின் மீது ராஜாவாக தேவனால் அறிவிக்கப்பட்டார், சிருஷ்டிப்பின் கீழான வரிசைகளில் உள்ளவைகளினாலும் அதுபோலவே அங்கீகரிக்கப்பட்டார். மனுக்குலம் கீழான விலங்குகளை கட்டுப்படுத்துவதற்கான தனது ஆதியில் இருந்த மன ஆற்றலை இழந்தபிறகு அவைகளுக்கிடையே ஒரு போர் வெடித்தது. அதில் மனிதன் விலங்கு சிருஷ்டிகளின்மீதான தனது பிடியை இழந்ததால், அவன் பலத்துக்கு எதிராக பலத்தை செலுத்தி போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளான்.

பாவத்தினால் இழந்த நிலையிலிருந்து, அந்த உயர்த்தப்பட்ட நிலைமைக்கு மனுக்குலம் மீட்டெடுக்கப்படுதல், இயல்பாகவே சுட்டிக்காட்டப்படுகிறது. எனவே நாம் பார்த்துவருகிற இந்த தீர்க்கதரிசனத்தில் பரிந்துரைக்கப்பட்ட காட்டு விலங்குகளை தங்களின் ஆதி நிலைமைகளுக்கு திரும்புகிற மீட்டெடுத்தலும் சுட்டிக்காட்டப்படுகிறது. இவைகள் மனுக்குலத்துடனான தங்கள் முறையான உறவுக்குள் கொண்டுவரப்படும்போது, ''ஒரு சிறுபையன் அவைகளை நடத்துவான்'' – அதாவது அந்த காட்டு மிருகங்களை கட்டுப்படுத்துவான் என்ற அறிக்கையில் இதே கருத்து தெரிவிக்கப்படுகிறது. ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தில் அதிகாரம் 65:20 ல், ''ஓநாயும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும்'' என்று ஆயிரமாண்டின் நிலைமைகளைப்பற்றி கூறப்பட்டுள்ளது. முந்தைய நிலைமையில் ஓநாய் மற்றும் ஆட்டுக்குட்டி போன்ற மனப்பான்மைகள் அல்லது குணஇயல்பை உடைய மனிதர்களுக்கு இதை குறிப்பிடலாம் அல்லது மிருகங்களை இது குறிப்பிடலாம் அல்லது இரண்டையும் குறிப்பிடலாம். சமாதானத்தின் ஆசீர்வதிக்கப்பட்ட ஆளுகையை இரண்டு விஷயத்திலும் உள்ள வெளிப்பாடு அடையாளப்படுத்துகிறது. ''சிங்கம் மாட்டைப்போல் புல்லை மேயும்''(ஏசாயா 11:7). ''புழுதி சர்ப்பத்தின் இரையாகும்'' (ஏசாயா 65:25) என்று தீர்க்கதரிசி தொடர்ந்து கூறுகிறார். இது நேரடி அர்த்தத்திலான சிங்கங்களை குறிக்கிறது என்றால், அவைகள் தங்கள் இறைச்சி உண்ணும் மனப்பான்மைகளை இழக்கும் என்பதையும், ஆதியில் சிருஷ்டிக்கப்பட்ட விலங்குகள் போல(ஆதியாகமம் 1:30), தாவர உண்ணிகளாக தங்களை உருவாக்கிக் கொள்கிற, ஏதோ ஒரு மாற்றத்துக்குள் அவைகள் செல்லும் என்பதையும் இது சுட்டிக்காட்டும். அப்போது விலங்குகள் ஒன்றை ஒன்று வேட்டையாடாது என்பதையும் இது சுட்டிக்காட்டுவதாக காணப்படும்.

**உலகத்திற்கான நம்பிக்கையின் விடியல்**

மேசியாவின் வரவிருக்கும் ஆளுகையைக் குறித்து சங்கீதம் 72:9இல் உள்ள அறிக்கைக்கு ஒத்ததாக, ''புழுதி சர்ப்பத்தின் இரையாகும்'' என்ற வெளிப்பாடு இருக்கிறது. அவருடைய சத்துருக்கள் மண்ணை நக்குவார்கள்'' என்பது சர்ப்பத்தின் அழிவை அல்லது சர்ப்பம் அடையாளப்படுத்துகிற மாபெரும் எதிராளியாகிய சாத்தானின் அழிவை அடையாளப்படுத்துகிறது. ''என் பரிசுத்த பர்வதமெங்கும் (ராஜ்ஜியம்) தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

உண்மையான சீயோனாகிய கிறிஸ்துவின் சபையின் பிறப்பு, நீதியை நேசிக்கிறவர்கள் எல்லார் மத்தியிலும் மகிழ்ச்சிக்கான காரணமாய் இருக்கும். ஏனென்றால் முதலில் இது அவர்கள் நீண்டகாலமாய் பற்றிக்கொண்டிருக்கிற நம்பிக்கைகளை தூள்தூளாக உடைத்தாலும், இதுவே உலகத்தினர் எல்லாருக்கும் ஒரு உண்மையான நம்பிக்கையின் விடியலாக இருக்கும். இது அவர்களின் பெருமையை தாழ்த்திப்போட்டு, அவர்கள் பேணிக் காப்பாற்றிய உடைமைகள் அனைத்தையும், அவர்கள் தங்கள் உரிமைகள் என கருத்தில் கொண்ட எல்லாவற்றையும் இழக்கச்செய்யும். இது அவர்களால் மேன்மைப்படுத்தப்பட்ட நிறுவனங்கள், பொதுத்துறை, சமூக மற்றும் மத நிறுவனங்களை உடைத்துப்போட்டு, தற்போதைய சமூக ஒழுங்குமுறையை முற்றிலும் அழித்துவிடும். ஆயினும் பழைய முறைமையைக் காட்டிலும் சகல தேசத்தாலும் விரும்பும்படி வர இருக்கிற மேன்மையான புதிய ஒழுங்குமுறையின் பரந்த மேன்மையை அவர்கள் விரைவில் கண்டுகொள்வர், மாபெரும் புதிய ஒழுங்குமுறை ஸ்தாபிக்கப்படுவதற்கு பழைய ஒழுங்குமுறை அவசியமான முன்நிகழ்வாக இருக்கும்.

**சீயோனிலிருந்து பிறக்கும் இரண்டு வகுப்பார்**

18 நூற்றாண்டுகளுக்கு முன் பிறந்த தலை மற்றும் தற்போது மிக விரைவில் பிறக்கவிருக்கிற சரீரம் ஆகிய, கிறிஸ்து என்கிற "ஆண் பிள்ளையின் பிறப்பைப் பற்றி விவரிக்கையில், ஏசாயா தீர்க்கதரிசி; "பிரசவ வேதனைப்படுமுன் பெற்றாள், கர்ப்ப வேதனை வருமுன் ஆண்பிள்ளையைப் பெற்றாள். இப்படிப்பட்டவைகளைக் கேள்விப்பட்டது யார்? இப்படிப்பட்டவைகளைக் கண்டது யார்? ஒரு தேசத்துக்கு ஒரே நாளில் பிள்ளைப்பேறு வருமோ? ஒரு ஜாதி ஒருமிக்கப் பிறக்குமோ? சீயோனோவெனில், ஒருமிக்க வேதனைப்பட்டும் தன் குமாரரைப் பெற்றும் இருக்கிறது"(ஏசாயா 66:7,8) என்று உரக்கச்சொல்கிறார். சீயோன் பிரசவ வேதனைப்படும் முன்பே சீயோனிலிருந்து ஒரு ஆண் பிள்ளை பிறக்கவேண்டும் என்று தீர்க்கதரிசி இங்கு பதிவு செய்திருக்கிறார் என்பதே குறிப்பிடத்தக்க அதிசயமான காரியம். சுவிசேஷ யுக சபையின் முதிர்ந்த கோதுமையானது, இந்த யுகத்தின் இறுதியில், முதிர்ச்சியடையாத கோதுமை மற்றும் களைகளிலிருந்து பிரித்தெடுக்கப்படவேண்டும் என்றும், சுட்டெரிக்கிற உபத்திரவம் வருவதற்கு முன்பே இவர்கள் உயர்த்தப்படவேண்டும், மகிமைப்படுத்தப்படவேண்டும் என்றும் எவ்விடத்திலும் தெளிவாக போதித்த உண்மைக்கு, இது மனதில் பதிய வைக்கிற குறிப்பாக உள்ளது.

அப்படியானால் இந்த ஆண்பிள்ளை, உண்மையான சீயோனும், சிறுமந்தையுமாயிருக்கிற கிறிஸ்துவின் சரீரமேயாகும். பெயரளவிலான சீயோனிலிருந்து பெயரளவிலான அமைப்பு தூக்கி எறியப்படுவற்கு முன்பு இந்த முதற்பலன்களாகிய வகுப்பார் வெளியே வருவர். ஏனென்றால் பிரசவ வேதனையில் அவள் மரித்துப்போவாள், அவள் மரிக்கையில், அவளது பிந்தைய குழந்தையை, திரள்கூட்டத்தை பெற்றெடுப்பாள். கர்த்தருடைய இந்த மாபெரும் நாளில், பெயரளவிலான சீயோன் ஆண் குழந்தையையும், இந்த பிந்தைய குழந்தைகளையும் பெற்றெடுக்கும்.

"பெறப்பண்ணுகிறவராகிய நான் பெறச்செய்யாமல் இருப்பேனோ? என்று கர்த்தர் சொல்லுகிறார். பிரசவிக்கப் பண்ணுகிறவராகிய நான் பிரசவத்தை தடுப்பேனா? என்று உன் தேவன் சொல்லுகிறார்" இல்லை! தலை பிறப்பிக்கப்பட்டது நிச்சயமாய் இருக்கிறதுபோல, சரீரம் பிறப்பதும் நிச்சயமாய் இருக்கும். பிறப்பு நிச்சயமாக நிறைவடையும். சீயோனில் பிரசவ வேதனை தொடங்கும் முன்பே ஒரு அங்கமும் குறைவுபடாமல் மாபெரும் தலையும் சரீரமுமாகிய கூட்டு – கிறிஸ்து முழுமையாக வெளிவரும். ஆனால் "இப்படிப்பட்டவைகளைக் கேள்விப்பட்டது யார், இப்படிப்பட்டவைகளை கண்டது யார்? அதேபோன்று ஆண்பிள்ளையை பிரசவித்தபிறகு, தாய் அமைப்புக்கு பிரசவ வலி வரும்போது திரளான கூட்டத்தைப் பெற்றெடுக்கும். அப்போகலிப்ஸில் இந்த திரளான கூட்டம் மகா உபத்திரவத்திலிருந்து வெளியேவந்து, கரைப்படிந்த அழுக்கடைந்த தங்கள் வஸ்திரங்களை, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் துவைத்து வெண்மையாக்கும் என்று விவரிக்கப்பட்டுள்ளது.

கர்த்தருடைய ஜனங்களாகிய இந்த இரண்டு வகுப்பார் பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, யூத தேசத்தின் பிறப்பு வரும். அவர்கள் ஒரு தேசமாக, 18நூற்றாண்டுகளுக்கும் மேலாக இருந்துவருகிற பாதாளத்தின் தூக்கத்திலிருந்து விழித்தெழுவார்கள். இவையனைத்தும் கிறிஸ்துவின் நாளின் அதிகாலையில் நடக்கும். ஓ, எப்பேர்ப்பட்ட மகிழ்ச்சி அங்கு இருக்கும்! மாம்ச சீயோனும் ஆவிக்குரிய சீயோனும் ஒருமித்து மகிழும். அதன்பிறகு விரைவில் தரித்திர, சிட்சிக்கப்பட்ட உலகம், சகல கிருபையும் பொருந்தின தேவனுக்கு துதி செலுத்துகிற பாடல்களில் கலந்துகொள்ள ஆரம்பிக்கும். எப்பேர்ப்பட்ட அற்புதமான காலங்கள் நமக்கு முன்பாக அருகிலிருக்கிறது! ஆசீர்வதிக்கப்பட்ட ஆயிரமாண்டு விடியலின் பிரகாசமான ஒளிக்கற்றைகளை மேகங்களும் காரிருளும் சிறிதுகாலத்திற்கு மறைத்தபோதிலும், சீக்கிரத்தில் மகிமைநிறைந்த "நீதியின் சூரியன்" கம்பீரமான முறையில் எழும்பும். அதன் ஒளிக்கற்றைகள் பூமியெங்கும் துரிதமாய்ப் பரவி, பாவத்தின் இருளை சிதறடித்து, தப்பறை மற்றும் மூடநம்பிக்கைகளின் மூடுபனியை அகற்றி, தேவனுடைய மகிமையாகிய அறிவின் வெளிச்சத்திற்குள் உலகத்தைக் கொண்டுவரும்.

**திரும்பக்கொடுத்தல் சுபாவத்தை மாற்றாது**

புதிய யுகத்தில் உலகத்திற்கு வருகிற ஆசீர்வாதங்களைக் குறித்த வேதாகமத்தின் முழு சாட்சியமும், அவைகளெல்லாம் பூமிக்குரியதாக இருக்கும் என்பதைக் காண்பிக்கிறது. விலங்கு சிருஷ்டியும்கூட சுபாவத்தில் மாற்றமடையும் என்ற அறிவிப்பானது, அந்த ஆசீர்வதிக்கப்பட்ட நாளில் மனுக்குலத்திற்கும் தேவனுடைய சிருஷ்டிகளில்

கீழானநிலையில் உள்ள சிருஷ்டிகளுக்குமிடையே எதிர்ப்பு மற்றும் பகைமையின் நிலை இனி இருக்காது. மாறாக எல்லாம் சமாதானமாகவும் இசைவாயும் இருக்கும் என்ற வாக்குத்தத்தமாக இருக்கிறது. இந்த மனுக்குலம் அனைத்தும் ஆவிக்குரிய ஜீவிகளாக மாற்றப்பட்டு தேவதூதர்களைப்போல் மாறும் என்றால், மனிதனுக்கு கீழ்ப்பட்டிருக்கும்படி விலங்குகளின் மனப்பான்மையை மாற்றுவது முற்றிலும் அவசியமற்றதாக இருக்கும். திரும்பக்கொடுத்தலின் காலத்தில் மனித ஜீவிகளாக பூமியைத் தழுவிக்கொண்டு, பூமியின் ஆசீர்வாதங்களை அனுபவிப்பார்கள் என்று அநேக தீர்க்கதரிசனங்கள் மனுக்குலத்தைப் பற்றிப் பேசுகிறது. அவர்கள் ''அவனவன் தன்தன் திராட்சச் செடியின் நிழலிலும் தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் பயன்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்(மீகா4: 4). ''அவர்கள் வீடுகளைக் கட்டி அவைகளில் குடியிருப்பார்கள்... அவர்கள் கட்டுகிறதும் வேறொருவர் குடியிருக்கிறதும் இருப்பதில்லை ... தங்கள் கைகளின்கிரியைகளை நெடுநாளாய் அனுபவிப்பார்கள்(ஏசா65:21–25).

பொதுவான உலகிற்கான இந்த வாக்குத்தத்தங்கள், இந்த சுவிசேஷ யுகத்தின்போது உலகத்திலிருந்து தேர்ந்தெடுக்கிற வகுப்பாருக்கு குறிக்கும்படி இருக்காது. இவர்களுக்கான வாக்குத்தத்தங்களெல்லாம் ஆவிக்குரியதாய் இருக்கிறது. அவர்கள் கிறிஸ்துவைப்போல உருவாக்கப்பட்டு, ''அவர் இருக்கிற வண்ணமாகவே அவரை தரிசிப்பார்கள்''(1யோவா3:2) . அவர்கள் அவருடைய மகிமையை அடைவதற்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ''மண்ணானவருடைய சாயலை அணிந்திருக்கிறதுபோல் அவர்கள் வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வார்கள்''(1கொரிந்15:49). அவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில், அதாவது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் பங்குபெறும் வாக்குறுதியைப் பெற்றிருக்கிறார்கள். பூமிக்குரிய ஜீவிகள் சுதந்தரிக்கமுடியாத இராஜ்ஜியத்தில் அவர்கள் இராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் ஆளுகை செய்வார்கள். ''மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிக்கமாட்டாது. அழிவுள்ளது அழியாமையை சுதந்தரிப்பதுமில்லை''(1கொரிந்15:50). அவர்கள் பரம அழைப்பினால் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கர்த்தரும் தலையுமானவர் உலகத்துக்குரியவர் அல்லாததுபோல அவர்களும் உலகத்துக்குரியோரல்ல(யோவான் 17:16).

**அநேகர் தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொள்ளத் தவறுவது ஏன் ?**

இந்த வேறுபாடுகளை புரிந்துகொள்வதில் அநேகருக்கு இருக்கும் சிரமம் என்னவென்றால், வேத வசனங்களை சரியாக பகுத்துப்பார்க்கத் தவறுவதே ஆகும். பரிசுத்த பவுல் தீமோத்தேயுவிற்கு ஆலோசனை கூறும்போது, ''நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் படிக்கிறவனாயும்(to study)உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு'' என்று கூறுகிறார்(2தீமோ2:15). தேவனுடைய இராஜ்யம் என்பது நம் கர்த்தராகிய இயேசுவையும், ஜெயங்கொள்கிறவர்களாகிய அவருடைய சிறுமந்தையையும் மட்டுமே உள்ளடக்கியது என்பதை உய்த்துணர்ந்துகொள்ள அவர்களுக்கு இந்த செயல்முறை இயலச்செய்யும். இவர்களைக்குறித்தே கர்த்தர் கூறினார் ; ''பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்''(லூக்கா 12:32). அநேக வேத வசனங்கள் குறிப்பிட்டுக் காட்டுவதுபோல், இவர்களே ஆளுகை செய்யும் வகுப்பாரைக் கட்டமைப்பார்கள். உலக மனுக்குலம் முதலில், இந்த ஆவிக்குரிய இராஜ்ஜியத்துக்கு கீழ்ப்பட்டிருப்பார்கள், அதன்பிறகு, மத்தியஸ்தம் செய்யும் யுகத்தின்போது, அவர்கள் அதன் பிரமாணங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் இசைவிற்கு வந்து, தேவனுடைய சீர்பொருந்தி, உலகத்தின் நித்தியபிதாவாக இருக்கும் கிறிஸ்துவின் பிள்ளைகளாக மாறினால், அவர்கள் குடிமக்களாக அல்லது அங்கத்தினர்களாக ஆவார்கள். ஆதாமின் முழு இனத்தையும் திருமபக்கொண்டுவருகிறவர் அவர்ஒருவரே. அதாவது இப்போதும் ஒரு குறிப்பிட்டளவு ஜீவனை உடையவர்களாக இருக்கிறவர்கள் மற்றும் கல்லறைக்குள் சென்றிருக்கிறவர்கள் ஆகிய இருவரையும் மரணநிலையிலிருந்து திரும்பச்செய்யும்போது, அவர்கள் விருப்பமுள்ளவர்களாகவும் கீழ்ப்படிகிறவர்களாகவும் நிரூபித்தால் முழு பரிபூரணஜீவனுக்குள் கொண்டுசெல்வார், இல்லையென்றால் அவர்கள் நித்திய அழிவாகிய இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டுபோவார்கள்

**இராஜ்ஜியம் இன்னும் வரவில்லை என்பது தெளிவாகத்தெரிகிறது**

தானியேல் தீர்க்கதரிசி, நேபுகாத்நேச்சாரின் கனவில் வந்த பெரிய சிலையைப்பற்றி விளக்குகையில், ஆயிர வருட யுகத்தின் தொடக்கத்தில் முதன்முதலில் ஸ்தாபிக்கப்படும் தேவனுடைய ராஜ்யம், ''கைகளால் பெயர்க்கப்படாத'' ஒரு சிறிய கல்லாக மட்டுமே இருக்கும்.''அது ஒரு பெரிய பர்வதமாக மாறி முழு பூமியையும் நிரப்பும்'' என்று காண்பிக்கிறார்(தானியேல் 2:31–45). இந்தக் கல் என்ற ராஜ்யம், கர்த்தரால் பூமியிலிருந்து வெட்டிஎடுக்கப்பட்டது. இது ஆரம்பத்தில் அளவில் சிறியதாக இருந்து, பலமற்றதாக உலகுக்கு காணப்பட்டது. ஆனால் அதிகாரத்தை அல்லது வல்லமையைப் பெற்றவுடன் இந்த ராஜ்யம் பூமிக்குரிய ஆட்சிஅதிகாரத்தின் ''பெரிய சிலையை'' நொறுக்கி, அதைத் தூள்தூளாக்கும்(வரவிருக்கும் உபத்திரவக் காலத்தில்) காற்று அதை அடித்துச்செல்லும். இந்தக் கல் என்ற ராஜ்யம், பரிசுத்த பர்வதம் என்று ஏசாயா 11:9ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு பர்வதம் என்பது வேதத்தில் ராஜ்யத்தைக் குறிப்பிடுகிறது. பர்வதங்கள் என்பது சிறுசிறு அல்லது சிறிய அரசாங்கங்களைக்

குறிக்கின்றன –ஏசாயா 2:2; 40:4; 51:5; 59:18; சங்கீதம் 46:2,3; 97:5 ஐ பார்க்கவும்

தேவனுடைய பரிசுத்த ராஜ்யம் முழுவதிலும் அது ஸ்தாபிக்கப்பட்டிருக்கும்போது, கேடு செய்யவோ அல்லது தீங்கு செய்யவோ எதுவும் அனுமதிக்கப்படாது. அன்பே பிரமாணமாக இருந்து, இந்த பிரமாணத்தை அமல்படுத்தும் வழிமுறையாக – தெய்வீக வல்லமை இருக்கும். அப்.பேதுரு வழியாக கர்த்தர் அறிவித்தபடி, அதற்கு இணங்காத அனைவரும் "ஜனத்திலிராதபடி அறுப்புண்டு போவார்கள்"(அப் 3:23). மனுக்குலத்தின் மத்தியில் தனிப்பட்ட முறையிலும் தேசிய அளவிலும் சுயநலமே ஆட்சிசெய்வதையும், இன்றைய நாளில் உலகம் முழுவதும் தீங்கு விளைவிக்கும் மற்றும் அழிக்கும் பல தீமைகளின் செல்வாக்குகள் இருப்பதையும் நாம் காணும்போது, இந்த ராஜ்யம் இன்னும் வந்திருக்கவில்லை என்பது தெளிவாகிறது. எனவே "உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலும் செய்யப்படுவதாக" என்று நாம் தொடர்ந்து ஜெபிப்போம். கர்த்தருடைய பரிசுத்தவான்களால் நீண்டகாலமாக வைக்கப்பட்ட(ஜெபிக்கப்பட்ட) இந்த வேண்டுகோளுக்கு மிகவிரைவில் பதில் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

மேசியா தீமையின் வல்லமையை நசுக்கினபிறகு, பிழை மற்றும் தீமையின் மாபெரும் அமைப்புக்கள் எல்லாவற்றையும் அவர் தூக்கியெறிந்தபிறகு, ஜனங்களைவிடுவித்தபிறகு, யேகோவா தேவனின் குணாதிசயத்தைப் பற்றிய அறிவை பரவச்செய்வதன்மூலம், மனுக்குலத்திற்கான ஆசீரை அவர் அளிப்பார். எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டுமானால். சத்தியத்தின் அறிவை அடையவேண்டும் என்பது தேவனுடைய சித்தம் என்று அப்.பவுல் நமக்கு உறுதியளிக்கிறார். அறிவு இல்லாமல் இரட்சிப்பு இருக்கமுடியாது என்று அவர் நமக்கு உறுதியளிக்கிறார். அறியாமையால் யாரும் ஒருபோதும் இரட்சிக்கப்படமாட்டார்கள். பூமியிலுள்ள கோடிக்கணக்கான ஜனங்களில் ஒப்பீட்டளவில் மிகச்சிலரே கர்த்தரிலும், அவர் இந்த முழு உலகத்திற்கும் வழங்கிய மாபெரும் பலியில் விசுவாசத்தை பயிற்சிசெய்ய இயலச்செய்கிற தேவனைப்பற்றிய அறிவைப் பெற்றுள்ளனர்.

**இரட்சிப்பின் திட்டத்தின் விசாலமான தன்மை**

ஆனாலும் தற்போதைய ஜீவியத்தில் மிகச்சிலரே இந்த இரட்சிப்பின் அறிவிற்குள் வருகிறார்கள் என்பது எந்த வகையிலும் மாபெரும் தெய்வீகத் திட்டத்தைத் தடுக்காது அல்லது ஆதாமின் முழு சந்ததிக்காகவும் மரித்த கிறிஸ்துவின் மரணத்தை பயனற்றதாக்காது. உலகத்தில் வந்து எந்த மனிதனையும் ஏற்ற சமயத்தில் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளி (யோவான் 1:9) என்று நம் கர்த்தர் தம்முடைய வார்த்தையில் நமக்கு உறுதியளிக்கிறார். இதில் அனைத்து புறஜாதியினரும், இந்த வாழ்க்கையில் சத்தியத்தைப் புரிந்துகொள்ளமுடியாத முட்டாள்தனமான சிந்தையுள்ள அனைவரும், கிறிஸ்துவுக்குள்ளான தேவனையும் அவருடைய சத்தியத்தையும் அறியக்கூடிய வயதை அடையுமுன்னே மரித்த எல்லாக் குழந்தைகளும் அடங்குவர், மரித்தவர்களும் உயிருள்ளவர்களும் இதில் அடங்குவர். ஏனெனில் இயேசுவின் நாமத்தைத் தவிர, வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே இரட்சிக்கப்படுவதற்கு வேறு எந்த நாமமும் கொடுக்கப்படவில்லை". இவ்வாறு தேவன் அனைவருக்கும் போதுமான ஏற்பாட்டைச் செய்துள்ளளார்.

மேசியாவின் ஆட்சிக்காலத்தில் உலகம் முழுவதும் பரவஇருக்கும் அறிவு, உலகின் மிகக்குறைந்த பகுதிக்கு தற்காலம்வரை இங்கும் அங்கும் சில இடங்களில் வந்துள்ள அறிவின் ஒரு சிறிய தெளிப்பு மட்டுமே என்றும் நாம் கருதக்கூடாது. கர்த்தருடைய ஜனங்கள் கிருபை மற்றும் சத்தியத்தின் துளிகளைப் பெற்றுள்ளனர், ஆனால் அடுத்த யுகத்திற்கான ஏற்பாடு அபரிதமாகவும், உலகளாவியதாகவும் இருக்கும். கர்த்தரைப்பற்றிய அறிவு சமுத்திரத்தின் ஆழத்தைப்போலும், சமுத்திரத்தின் நிறைவைப்போலும் இருக்கும்.ஆசீர்வாத மழை மிகுதியான அளவில் உலகின்மீதுபெய்யும். அதன்விளைவு, "புல்லறுப்புண்ட வெளியின்மேல் பெய்யும் மழையைப்போல இருக்கும்" (சங்கீதம் 72:6). புல் புதிதாக வெட்டப்பட்டு அதன்வேர்கள் இப்படி எளிதில் நெருங்கக்கூடியதாக இருக்கும்போது, புத்துணர்ச்சியூட்டும் மழைக்கு அது எவ்வளவு விரைவாக எதிர்செயலைத் தரும்! புதுப்பிக்கப்பட்ட வீரியத்தில் அது எவ்வளவு விரைவாக முளைக்கும்! கிருபையின் மழை மனுக்குலத்தின் இருதயங்களை அடைவதைத் தடுக்கிற அனைத்தையும், அவர்கள் சுமையாய் கொண்டிருந்த அனைத்தையும் அவர்கள் துண்டித்துவிட்டபிறகு, மனுக்குலத்திற்கும் இதுபோலவே இருக்கும். அவர்கள்மீது அளவுக்கு அதிகமாக பொழியும் புத்துணர்ச்சியூட்டும் மழைக்கு அவர்கள் எவ்வளவு விரைவாக பதிலளிப்பார்கள். மேலும் கிருபை அதிகமாக வழங்கப்படுவதைப் பருகும்போது, அவர்கள் ஜீவனிலும் அழகிலும் துளிர்விடுவார்கள்.

----------

**R 5577**

## தேவனால்அடிபட்டு, வாதிக்கப்பட்டவர்

SMITTEN OF GOD, AFFLICTED

**ஆதார வசனங்கள் மாற்கு 15: 22–37**

"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு, வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்" –ஏசாயா 53 :4.

இயேசு சிலுவையில் அறையப்பட்டதோடு தொடர்புடைய உண்மைகளைப் பொறுத்தவரை எந்த சர்ச்சைக்கும் இடமில்லை. சிலுவையில் அறையப்பட்டதற்கான தெய்வீக வரம்பு மற்றும் காரணம் குறித்து மட்டுமே விவாதிக்க

இடம் உள்ளது. ஏசாயா தீர்க்கதரிசி நமக்கு தெய்வீக விளக்கத்தை அளிக்கிறார்.

**துக்ககரமான வழி!**

இரட்சகர் தனது மூன்று வருட ஊழியத்தில் பெரிதும் பலவீனமடைந்திருந்தார், இதில், ஜனங்களின் நோய்களை குணப்படுத்துவதில் அவர் தனது ஜீவ ஆற்றலை இலவசமாக கொடுத்திருந்தார். இதுதவிர, பஸ்காவுக்கு ஆயத்தம் பண்ணும்படி தம் சீஷர்களை அனுப்பின நேரத்திலிருந்தே, அவர் தொடர்ந்து துக்கமின்றி, மனஅழுத்தத்தில் இருந்தார். இந்த காலகட்டமானது, பஸ்கா மற்றும் நினைவுகூருதலின் இராப்போஜனத்தை நிறுவியதோடு இணைக்கப்பட்டிருந்த சோதனை அனுபவங்கள், கெத்செமனே பயணம், அங்கு பலமணிநேர அகோர வேதனையும் பலவீனமும் இருந்தது, அதைத்தொடர்ந்து வந்த அனுபவங்கள், பிரதான ஆசாரியர்களால் நியாய ஆலோசனை சங்கத்தின் முன் விசாரணை, ஏரோது மற்றும் பிலாத்துவின் முன்பு நடந்த விசாரணை, கசையடிகள் போன்றவை அனைத்தும் அவருக்கு ஒரு நிலையான மனஅழுத்தமாக இருந்தன. இப்போது யாருக்காக தம் பரலோக வீட்டையும் மகிமையையும் தியாகம் செய்திருந்தாரோ, அவர்களாலேயே சிலுவையில் அறையப்படுவதற்கு தண்டிக்கப்பட்ட அவர், கூடுதலாக தனது சொந்த சிலுவையையும் சுமக்க வேண்டியிருந்தது. இறுதியாக, அந்த சிலுவை மரத்தின் எடையின்கீழ் அவரது பலவீனம் தடைபடும்வரை, அவர் அவ்வாறு செய்தார், மேலும் அங்கு சென்றுகொண்டிருந்த ஒரு விவசாயி அவருக்கு உதவவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவர் சிலுவையை முழுவதுமாக சுமந்தாரா அல்லது இயேசுவின் பின்னால் நடந்துசென்று சிலுவை மரத்தின் ஒரு பகுதியை மட்டும் சுமந்தாரா என்று வேதாகம மூலப்பிரதியில் தெளிவாக கூறப்படவில்லை.

பேதுருவும், யோவானும், யாக்கோபும், தோமாவும் மற்ற அப்போஸ்தலரும் உதவிசெய்ய முன்வராதபடிக்கு எங்கே இருந்தார்கள்? அவர்கள் பயத்தால் தடுக்கப்பட்டிருந்தனர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்கள் எப்பேர்ப்பட்ட ஒரு ஆசீர்வாதத்தை இழந்தார்கள்! வற்புறுத்தலால் சிலுவை சுமந்த சிரேனிய விசுவாசி, அந்நேரத்தில் அடைந்த அனுபவங்கள் மூலம், இரட்சகரது செய்தியைப் பற்றின சத்தியத்தை தன் இருதயத்தில் பதித்ததன்மூலம், பின்னாளில் நசரேயனைப் பின்பற்றுபவர்களில் ஒருவராக ஆனார் என்று பாரம்பரியம் கூறுகிறது.

சுற்றிலும் ஸ்திரீகள் கூட்டமாக நின்று அழுதுகொண்டிருந்தாலும், அவர்களில் ஒருவரும் உதவிக்கரம் நீட்டவில்லை என்பது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இயேசு அவர்கள் பக்கமாகத் திரும்பி, ''எனக்காக அழாதேயுங்கள்.. உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்'' என்றார். இது தொடர்பாக தங்களை மறைப்பதற்கும் பாதுகாப்பதற்கும், மலைகளையும் குன்றுகளையும் அவர்கள் தேடியதைப் பற்றிய எஜமானின் வார்த்தைகள், முப்பத்தேழு ஆண்டுகளுக்குப் பிறகு எருசலேமின் அழிவில் யூத ஜனங்கள்மீது வந்த பெரும் துன்பத்தின் ஒருபகுதி என சில வேதமாணவர்களால் கருதப்படுகிறது. மேலும் எருசலேமின் இந்த அழிவும் துன்பங்களும் இந்த யுகத்தின் இறுதிக்காலத்தில் ஏற்படவிருக்கும் மிகப்பெரிய துன்பத்தை முன்னறிவித்த நிழலான மாதிரிகள் என்று கருதப்படுகிறது.

நிச்சயமாக, இந்த சுவிசேஷயுகத்தின் முடிவில் மலைகள் மற்றும் குன்றுகள் தொடர்பான அதே வெளிப்பாடுகள் பயன்படுத்தப்படுகின்றன. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது எரிகின்ற அக்கினியாகிய நியாயத்தீர்ப்புகள் வெளிப்படுத்தப்பட்டிருந்து, தற்கால ஒழுங்குமுறைகளை அழித்து, புதிய ராஜாவுக்கான வழியை ஆயத்தம் செய்யும். மிக எளிதான முறையில் தன் உயிரை மாய்த்துக்கொள்ள முடிந்தால், மலைகள் தன்மீது விழவேண்டும் என்று யாரும் ஜெபிப்பார்கள் என்று நாம் எண்ணவேண்டியதில்லை. மாறாக பெரும் சீற்றத்தின் அலைகளாகிய உபத்திரவங்களிலிருந்து பாதுகாப்பிற்காக அநேகர் ஒளிந்துகொள்ளவேண்டும் என்று தேடுவார்கள், விரும்புவார்கள், ஜெபிப்பார்கள் என்ற எண்ணம் தோன்றுகிறது. சமூகத்தின் பாறைகளாக அதன் சமூக அமைப்புக்கள் இருந்து, அதன் சொந்த உறுப்பினர்களை பாதுகாக்க முயல்கின்றன.

''பச்சை மரத்துக்கே இப்படிச்செய்வார்களானால், பட்ட மரத்துக்கு என்ன நடக்கும்'' என்று இயேசு கூறினார். இங்கு அவர் யூத தேசத்தை அத்திமரத்துக்கு ஒப்பிட்டு, அது தனது சாபத்தால் அல்லது தீர்ப்பினால் சீக்கிரம் உலந்துபோனதை குறிப்பிடுகிறார். எனவே இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு 5 நாட்களுக்கு முன்பு கழுதையின்மீது ஏறி எருசலேமுக்குள் வந்து, அதற்காக அழுது, ''உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கிவிடப்படும்'' என்று கூறினார். இப்போது மிகக் குறுகிய காலத்தில், அத்திமரம் இன்னும் பசுமையாக இருந்தபோதே, அதன் ஆட்சியாளர்கள் ஒரு நம்பிக்கையற்ற நிலையை அடைந்திருந்தனர். இதனால் நியாயப்பிரமாணம் முழுவதையும் மீற அவர்கள் மனதாயிருந்து, அவரை சிலுவையில் அறைவதில் தங்கள் முழு மனசாட்சியையும் ஒதுக்கிவைத்தனர்.

இப்படிப்பட்ட நீதியின் கொடூரமான சீற்றத்துக்கு, தீமை இவ்வளவு சீக்கிரம் வழிவகுத்ததென்றால், பின்னாளில் யூத அத்திமரம் முற்றிலுமாக காய்ந்து, அதிலிருந்து அனைத்து உயிர்ச்சத்தும்(ஆவிக்குரிய நிலை) வெளியேறினபிறகு, எதை எதிர்பார்க்காமல் இருக்கக்கூடும்? அதுபோலவே, இந்த யுகத்தின் முடிவிலும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை – பரிசுத்தவான்கள், வன்முறையால் துன்புறுவர் என்றும், இவ்வாறு பூமியின் உப்பு அகற்றப்படும் என்றும், அதன்பிறகு விரைவில் அராஜகத்தில் ஒரு பொதுவான சிதைவையும் அழுகச்செய்தலையும் ஏற்படுத்தும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

**மனுஷகுமாரன் உயர்த்தப்பட்டார்**

இயேசு தம்முடைய சிலுவை மரணத்தை முன்னுரைத்து கூறியதாவது ;'' வனாந்தரத்தில் வெண்கல சர்ப்பத்தை மோசே

உயர்த்தினதுபோல, மனுஷகுமாரனும் உயர்த்தப்படவேண்டும்''– சிலுவையிலறையப்படவேண்டும் என்றார். வெண்கல சர்ப்பமானது இயேசுவுக்கு நிழலாக இவ்வாறு பயன்படுத்தப்பட்டது. அவர் மெய்யாகவே பரிசுத்தரும் குற்றமற்றவரும், மாசில்லாதவருமாய் இருந்தார்; ஆயினும் அவர் பாவியின் ஸ்தானத்தை எடுத்தார்–அதாவது ஒரு பாவியாகவே நடத்தப்பட்டார். நியாயப்பிரமாணத்தின் கீழ் கடுமையான தண்டனை, சிலுவையில் அறையப்படுதலாகும். ''மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்'' என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காக சாபமானார்...'' என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். அவர் பாவத்தை அறியாதிருந்தும், பாவியின் ஸ்தானத்தை எடுத்தார். வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக இயேசு மரித்தார்.

''பிதாவே, அவர்களை மன்னியும், ஏனெனில் அவர்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்'' என்று நம் பாடத்தின் ஆதாரவசனங்கள் கூறுகின்றன. ஆயினும் இவ்வசனமானது பழைய கிரேக்க மூலப்பிரதிகளில் காணப்படாததால், கணக்கில் எடுத்துக்கொள்ளப்படக்கூடாது. மேலும் யூதர்களுடைய பாவம் தண்டனையைப் பெற்றுத்தரும் என்று இயேசு அறிந்திருப்பார். தேவன் அவர்களைத் தண்டிப்பார் என்றும், அவர்களுடைய நகரத்தை அழிப்பார் என்றும் அவர் ஒரு உவமையில் முன்னுரைத்திருந்தார் (லூக் 20: 14–16). ''உங்களுக்காக அழுங்கள்'' என்ற வாக்கியத்தின் சூழல், யூதர்கள் செய்த பாவத்திற்கான தண்டனையைக் குறிக்கிறது. மேலும் இந்தப் பாவம் முழுமையாக அவர்களுக்கு மன்னிக்கப்படாது. உண்மையாகவே, யூதர்கள் 18 நூற்றாண்டுகளுக்கும் மேலாக, தெய்வீக தயவிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளனர் என்பதை நாம் அறிவோம். இந்த தெய்வீக ஏற்பாடுகள் எல்லாவற்றிலும் இயேசு பிதாவுடன் முழு இணக்கத்தோடு இருந்தார் என்றும், அவர் தெய்வீக சித்தத்துக்கு முரணான எதையும் கேட்கவில்லை என்றும் நாம் கருதுவது பொருத்தமானது.

இயேசுவை நிராகரித்த நேரத்தில், யூதர்கள் மீது வந்த துன்பத்தைப் பற்றி பரிசுத்த பவுல் கூறுகையில்; அவர்களைக்குறித்து எழுதப்பட்டவைகள் அனைத்தும் நிறைவேறும்படிக்கு, ''அவர்கள்மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது'' என்று இந்த விஷயத்தையும் குறிப்பிடுகிறார் –1தெச2: 14–16.

மறுபுறம், யேகோவாதேவன், அவர்களுக்கென தம் பிரதிநிதியாக விசேஷமாய் அனுப்பியிருந்த தம் குமாரனை, யூதர்களுக்காக தம் ஜீவனைக் கொடுத்த இயேசுவை கொலைசெய்த மிகப்பெரிய பாவத்திற்காக, அவர்கள்மேலிருந்த தண்டனையை அடையக்கூடாது என்று விரும்பமாட்டார் என்று நாம் உறுதியாக நம்பலாம். அத்தகைய துணிகரமான பாவத்துக்கான நீதியான தண்டனை, சந்தேகத்திற்கிடமின்றி, முழுமையான அழிவாக இருக்கும். ஆனால் இயேசுவின் இரத்தம் நீதியை அல்ல, ''நன்மையானவைகளைப் பேசுகிறது'' என்று அப்போஸ்தலர் சுட்டிக்காண்பிக்கிறார்(எபி 12:24). அவருடைய இரத்தம் மீதமுள்ள உலக ஜனங்களுக்காக மட்டுமல்ல. யூதர்களது பாவங்களுக்கான மன்னிப்பைக் குறித்தும் பேசுகிறது. மேசியாவின் ராஜ்யத்தில் தேவனிடத்தில் ஒப்புரவாகுவதற்கான முழுவாய்ப்பைக் குறித்து இது பேசுகிறது.

''யூதர்கள்(குறைந்தபட்சம்) ஓரளவு அறியாமையின் காரணமாக அவர்களின் போக்குக்கு முழுப் பொறுப்பாளிகள் அல்ல என்ற கருத்தை பரிசுத்தபேதுரு உறுதிப்படுத்துகிறார். பின்னர் அவர்களில் சிலரை நோக்கி அவர் ; ''சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன். அவர்கள் அறிந்திருந்தார்களானால் ஜீவாதிபதியை அவர்கள் சிலுவையில் அறைந்திருக்கமாட்டார்களே!'' (அப் 3:15–17)என்று கூறுகிறார். தேவனுடைய ஏற்றவேளையில், முழு உலகத்தின் புரிந்துகொள்ளும் கண்கள் திறக்கப்படும் என்று சகரியா தீர்க்கதரிசி நமக்குக் காண்பிக்கின்றார். எல்லோரும் விஷயங்களை வித்தியாசமாய் காண்பார்கள், குறிப்பாக யூதர்கள், ''தாங்கள் ஊடுருவக் குத்தினவரை'' காண்பார்கள் என்று விசேஷமாய் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்போது கர்த்தர் அவர்கள்மீது கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் பொழிவார், அவர்கள் தாங்கள் ஊடுருவக் குத்தினவரை நோக்கிப்பார்த்து, தங்கள் சிறந்த நண்பரும், மீட்பருமாகிய அவரை மோசமாக நடத்தினதை உணர்ந்து புலம்புவார்கள்(சகரியா 12:10).

**என் வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டனர்**

இயேசு மரிக்கும்வேளையில் ரோமானியப் படைவீரர்கள் அவருடைய தையலிடாத அங்கிக்காக சீட்டுப்போட்டதும். அவருடைய மேலங்கிகளை அவர்களுக்குள் பங்கிட்டதுமான செயல், அவர்களுடைய கல்லான இருதயத்தை சுட்டிக்காட்டுகிறது. ஆயிரவருட ராஜ்யத்தின் பலனாக, அவர்களுடைய மாம்சத்திலிருந்து கல்லான இருதயங்கள் அகற்றப்பட்டு, அதற்குபதிலாக மென்மையான இருதயங்கள் அளிக்கப்படும் என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தை நாம் பெற்றிருக்கிறோம். ஓ! ஆதாமில் முதலில் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டதும், அதனையடுத்து மனிதனாகிய இயேசுவில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டதுமான தேவனுடைய சாயலுக்கும் ரூபத்துக்குமான முழு திரும்பக்கொடுத்தல் மனுக்குலம் அனைத்திற்கும் எவ்வளவு தேவையாயிருக்கிறது!

இயேசுவின் இரு பக்கங்களிலும் ஒரே நேரத்தில் தூக்கிலிடப்பட்ட இரு கள்வர்களில் உலகத்தின் மனப்பான்மை மேலும் பிரதிபலிக்கிறது. அவருடைய சிலுவையின்மேலிருந்த கல்வெட்டில், யூதர்களின் ராஜா என்று எழுதப்பட்டிருந்தது. தன்னோடுகூட சிலுவையிலறையப்பட்டவர்களில் ஒருவன், துன்புற்றிருக்கும் அதேவேளையில், இயேசுவை மோசடிக்காரர் என்று குறைகூறினான். தன்னையும் தனது கூட்டாளிகளையும் காப்பாற்றுவதன்மூலம், அவருக்கு

இருக்கும் வல்லமையை வெளிப்படுத்தும்படி இயேசுவை கேலிசெய்தான். இயேசு தன்னைக் காப்பாற்றியிருந்தாரானால் உலகிற்கான இரட்சகராக இருந்திருக்கமுடியாது என்பதை அவன் சிறிதும் உணரவில்லை!

மற்றொரு திருடன் இயேசுவின் நண்பராகி, தான் தவறு எதுவும் செய்யவில்லை என்றும், அநியாயமாக குற்றஞ்சாட்டப்பட்டதாகவும் கூறினான். பின்னர் இயேசுவிடம் திரும்பி, அவருடைய அன்பான வார்த்தைகளுக்கான வெகுமதியை கேட்பதன்மூலம் அவரிடத்தில் வைத்த தனது விசுவாசத்தை வெளிப்படுத்தினான். ''கர்த்தாவே, நீர் உம் இராஜ்யத்தில் வரும்போது என்னை நினைவுகூரும்'' என்றான். இயேசு தம்மை ஒரு ராஜாவாக கூறிக்கொண்டதை அந்த ஏழை கள்வன் அறிந்திருந்தான். இயேசுவை விசாரிக்கும்போது, அந்த கள்வன் அருகில் நின்றுகொண்டிருந்தான். ''நீ ராஜாவா?'' என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, ''என் ராஜ்யம் இந்த யுகத்துக்குரியதல்ல'' என்று இயேசு பதிலளித்ததை அவன் கேட்டான். இயேசு மிகவும் உயர்ந்த குணமும் தோற்றமும் உடையவராய், அவர் ஒரு ராஜாவாக இருக்கத் தகுதியானவர் என்று அக்கள்வன் உணர்ந்தான். உண்மையில் அவர் கூறினதுபோல் அவர் இருந்தால் என்னசெய்வது? இறுதியாக, பிற்பாடு இவர் மேசியாவாக நிரூபிக்கப்பட்டால் என்னசெய்வது? அவர் குறைந்தபட்சம் உண்மையைக்கூறி, தன் பாதுகாப்புக்காக ஒரு வார்த்தையாவது சொல்வார், இவர் தம் ராஜாவுக்குரிய அதிகாரத்தை அடைவாரானால், குறைந்தபட்சம் நினைவுகூருதலையாவது கருணையோடு அவர் கேட்பார்.

இக்கள்வனுக்கு இயேசுவால் அளிக்கப்பட்ட பதில், நம் அனைவராலும் கடந்த காலங்களில் பொதுவாக தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டிருந்ததாக காணப்படுகிறது. ராஜ்யத்தில் அதேநாளில் அக்கள்வன் அவரோடுகூட இருப்பார் என அவர் அவனுக்கு வாக்களித்ததாக நாம் எண்ணியிருந்தோம். ஆனால் மற்ற வேத வசனங்களின்படி பார்க்கும்போது, அந்த நாளில் இயேசுவே ராஜ்யத்தில் இருக்கவில்லை, மாறாக யோசேப்புவின் கல்லறையில் நித்திரையிலிருந்தார் என்பதை நாம் அறிந்துகொண்டோம். அவர் மூன்றாம் நாள்வரை மரித்தோரிலிருந்து, ஷியோலிலிருந்து, ஹேடஸிலிருந்து, கல்லறையிலிருந்து எழுந்திருக்கவில்லை. ஆனால் அவரது உயிர்த்தெழுதலுக்குப்பிறகு மரியாளிடத்தில் அவர் கூறுகையில், ''நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகவில்லை என்றார்''. அப்படியானால் இயேசுவும் அந்தக் கள்வனும் அதே நாளில் பரதீஸில் ஒன்றாக இருப்பார்கள் என்று அவர் சொல்லியிருக்கமுடியாது என்பது தெளிவாகிறது.

இதன் உண்மையான விளக்கம் விரைவில் நிகழவிருக்கிறது. ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, விழுகையின் மூலம் இழந்துபோன பரதீசு, மேசியாவின் மகிமை நிறைந்த இராஜ்யத்தில் அவரால் மீட்டெடுக்கப்பட உள்ளது. அப்போதுதான்; அந்தக் கள்வன் கேட்டுக்கொண்ட; ''நீர் உமது ராஜ்யத்திற்குள் வரும்போது என்னை நினைவுகூரும்'' என்ற காரியம் நினைவுகூறப்படும். அன்றிலிருந்து அந்தக் கள்வன் மரணத்தில் உறங்கிக்கொண்டிருந்து,மேசியாவின் ராஜ்யம் வரும் நேரத்திற்காக காத்திருக்கிறான். இயேசுவின் பதில் இதற்கு முழுமையாக ஒத்துப்போகிறது: ஆமென், அப்படியே ஆகட்டும். ''மெய்யாகவே உனக்கு நான் சொல்கிறேன், இந்த நாளில் (எனக்கு ஒரு நண்பன் இல்லை என்று தோன்றும் இந்த நாளில், எனக்கு ஒரு ராஜ்யம் கிடைப்பதைவிட வேறு எதுவும் சாத்தியமில்லை என்று காணப்படும் இந்த நாளில், நான் உனக்குச் சொல்லுகிறேன்), நீ என்னோடேகூட பரதீசிலிருப்பாய்'' (லூக்கா 23:43).

இயேசுவின் ராஜ்யம், உலகத்தை ஒரு பரதீசாக மாற்றும் வேலையை விரைவில் துவங்கும். மேலும் மரணத்தில் உறங்கிக்கொண்டிருக்கிற திரளான கூட்டத்தாரின் உயிர்த்தெழுதலில், அந்தக் கள்வன் எஜமானரால் நினைவுகூறப்படுவான். சிலுவையில் பேசப்பட்ட அவரது ஆறுதலான வார்த்தைகள், பரதீசில் மாபெரும் ஆசீரை அவனுக்கு சந்தேகத்திற்கிடமின்றி கொண்டுவரும். ஏனெனில் அவன் நொறுங்குண்ட, மென்மையான இருதயத்தை உடையவனாயிருப்பதை அவன் பேசின வார்த்தைகள் சுட்டிக்காட்டுவதால், அப்படிப்பட்டவர்கள் ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை முதலாவதாக பெற்றுக்கொள்வார்கள்.

இயேசு தம்முடைய சீஷனான யோவானிடம் தம்முடைய தாயை ஒப்புவித்தது, அவளுடைய கணவர் யோசேப்பு உயிரோடில்லாததைக் குறிப்பிடுகிறது. தம்முடைய உச்சபட்ச துன்பவேளையிலும், தம்முடைய அன்புக்குரியவர்களின் நலனில் எஜமான் கவனமாக அக்கறை கொண்டிருந்ததை நமக்குக் காண்பிக்கிறது.

''என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்'' என்ற எஜமானின் மரணக் கூக்குரல், அவர் தன்னை பரலோகப்பிதா என்று கூறாமல், பிதாவின் குமாரன் என்ற உண்மையையே நமக்கு சான்றாக அளிக்கிறார். மேலும் பாவியின் தண்டனையை எஜமான் எவ்வாறு அதிகபட்சமாக சகித்தார் என்பதையும் நமக்குக் காட்டுகிறது. பாவத்தின் தண்டனை மரிப்பது மட்டுமல்ல, தேவனுடனான ஐக்கியத்திலிருந்து துண்டிக்கப்படுவதும் ஆகும். பாவியின் ஸ்தானத்தை அடைந்த இயேசு, குறைந்தபட்சம் ஒரு கனமாவது, பாவி அந்நியபப்படுத்தப்பட்டதன் முழு அனுபவத்தையும் அடைந்திருக்கவேண்டும்.

''எல்லாம் முடிந்தது'' என்ற எஜமானரின் கூக்குரல், ''நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானம்(மரணத்திற்குள்)உண்டு; அது நிறைவேறுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன் (துன்புறுகிறேன்)'' என்ற முந்தையநாளின் அவரது கூற்றை நமக்கு நினைவுபடுத்துகிறது.

''பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்'' என்ற வார்த்தைகள், இயேசு தம் ஜீவனை கையளித்தார் என்ற உண்மையை நமக்கு நினைப்பூட்டுகிறது.

அவர் கொண்டிருந்த ஜீவ ஆவி, முந்தைய நிலையிலிருந்து மாற்றப்பட்டதாகும். ஆதாமைப்போல் அவர் தனது ஜீவ உரிமையை இழக்கவில்லை. ஆகவே அவர் அதை தனது சொந்த ஆவியாக, அதை அந்த நேரத்திற்கு ஒப்புக்கொடுத்த ஜீவனுக்கான தன் சொந்த உரிமை என்று இன்னும் பேசலாம், உயிர்த்தெழுதலில் அது அவருக்கு மீண்டும் கொடுக்கப்படும் என்ற தெய்வீக வாக்குத்தத்தத்தின்கீழ் வைக்கப்பட்டது.

–––––––

**R 5578**

## உயிர்த்தெழுந்த கிறிஸ்து

THE RISEN CHRIST

**ஆதார வசனங்கள் மாற்கு 16: 1–8 : மத்தேயு 28:11–15.**

"உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன ? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்" –லூக்கா 24 :5,6.

மரித்தோரின் உயிர்த்தெழுதல் ஒரு பிரம்மிக்கத்தக்க முன்மொழிவு ஆகும். அதன் நிறைவேற்றம் தேவதூதர்களுக்கும் மனிதர்களுக்கும் இதுவரை செய்யப்பட்ட தெய்வீக வல்லமையின் மிகப்பெரிய வெளிப்பாடாக இருக்கும். யவீருவின் மகள் மற்றும் நயீன் ஊர் விதவையின் மகன் விழித்தெழுப்பப்பட்டதும், மேலும் இயேசுவின் நண்பனான லாசரு எழுப்பப்பட்டதும் மரித்தோரின் உயிர்த்தெழுதல் என்று எங்கும் கூறப்படவில்லை. அவை வெறும் விழித்தெழுப்புதல் மட்டுமே, இம் மூன்றில் கடைசியாக இருக்கும் நிகழ்வு மிகவும் அற்புதமானது. ஏனெனில் லாசரு மரித்து நான்கு நாட்கள் ஆகிவிட்டன, சடலத்தின் அழுகல் ஆரம்பித்துவிட்டது.

"நீ செத்துக்கொண்டே சாவாய்" மற்றும் நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்" என்ற தெய்வீக தண்டனையின்கீழ் மரித்து, மண்ணுக்குச் சென்ற கோடிக்கணக்கான மனுக்குலத்தின் தனிப்பட்ட ஆளுமையையும், உணர்வையும் மீண்டும் கொண்டுவருவதே, வேதாகமத்தில் வாக்களிக்கப்பட்ட மரித்தோரின் உயிர்த்தெழுதலாகும் . தேவன் ஏற்பாடுசெய்திருக்கிற வழியைத்தவிர, தெய்வீக தண்டனையிலிருந்து தப்பித்து உயிர்த்தெழுதலை அடைய முடியாது. அது, இயேசு ஆதி பாவியாகிய ஆதாமின் இடத்தை எடுத்தார் என்பதாகும். மரண தண்டனையிலிருந்து அவனை விலைக்கு வாங்கினது, அவனுக்குள் மரித்த அனைவரையும் வாங்குவது என்று பொருளாகும். இவ்வாறு "கிறிஸ்து நம்மை தேவனிடத்திற்கு கொண்டு சேர்க்கும்படி, அநீதியுள்ளவர்களுக்கு பதிலாக நீதியுள்ளவராக..." மரித்தார் என்று நாம் வாசிக்கிறோம் – 1பேதுரு3:18.

தேவன் மனித சரீரத்திலிருந்து உருவாக்கிய தூசித்துகள்களின் ஒருபகுதியை சேகரித்து, ஒரு காலத்தில் அதை உருவாக்கிய அதே பொருளின் துகள்களிலிருந்து மனித இனத்தை மறுபடியும் ஒழுங்குபடுத்துவார். சரீரம் மட்டுமே இவ்வாறு உயிர்த்தெழுப்பப்படும் என்ற தவறான கருத்துக்கள் பரவியுள்ளன. இறந்தவர்களின் சடலங்கள் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ தாவரங்களுக்குள் சென்று, அதன்மூலம் மற்ற விலங்குகளுக்கும் பிற மனிதர்களுக்குள்ளும் சென்றுவிட்டன என்று சிந்திக்கும்போது, இந்த முன்மொழிவின் அபத்தம் நமக்குள் வளர்கிறது. ஆப்பிள் மரத்தின்வேர்கள் ஒரு சவப்பெட்டியை ஊடுருவி, சடலத்தின் வடிவத்தை எடுத்தன என்ற கதையால் இது நன்கு விளக்கப்பட்டுள்ளது. இந்த ஆப்பிள்கள் பல்வேறு ஜனங்களால் உண்ணப்பட்டன, அவற்றில் சிலவற்றை பன்றிகள் உண்டநிலையில், அவை தேசத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்பட்டன.

வேதாகம போதனைகள் பொதுவாக தவறாக புரிந்துகொள்ளுதலின் பகுத்தறிவற்ற தன்மையை இந்தக் கதை நன்கு விளக்குகிறது. "பாவம் செய்யும் ஆத்துமா சாகும்"(எசேக் 18:4,20). இவ்வசனத்தில் ஆத்துமாவே சாகிறது என்று வேதாகமம் அறிவிக்கிற பார்வையை நாம் இழந்துவிட்டதே சிரமத்துக்கான காரணம். ஒவ்வொரு 7வருடங்களுக்கு ஒருமுறை, நம் சரீரங்கள் மாற்றமடைகின்றன, புதுப்பிக்கப்படுகின்றன என்று விஞ்ஞானம் நமக்குக் கூறுகின்றது. ஆகவே ஆதாம் பாவம் செய்தபோது இருந்த சரீரம் மரித்துவிட்டது, அவர் ஜீவித்த 930 வருட அனுபவத்தின்போது, மற்ற அநேக சரீரங்கள் மரித்துப்போயின. ஆனால் அவரது ஆத்துமா, அவரது ஆளுமை, 930 வருடங்களில் ஒரேமுறை மட்டுமே மரித்தது. ஆத்துமாவே மரிக்கிறது, அதுவே மீட்கப்பட்டு உயிர்ப்பிக்கப்படஉள்ளது. "நீ விதைக்கிறபோது, இனி உண்டாகும் மேனியை விதைப்பதில்லை"(1கொரிந் 15:37).

**நம் கர்த்தர் இனியும் மனிதரல்ல**

பிதாவுடன் லோகோஸாக இருந்த கிறிஸ்து, ஒரு உயரிய ஆவிக்குரிய தளத்தில் ஒரு ஜீவ ஆத்துமாவாக அல்லது ஜீவியாக இருந்தார். மனிதனுக்காக அவர் தன்னையே தாழ்த்தி, "அடிமையின் ரூபமெடுத்து" மனிதசாயலானார் – ஒரு மனிதனைப்போல் காணப்பட்டார்– ஒரு மனித ஜீவியாக அல்லது மனித ஆத்துமாவாக அவர் மரித்தார் – "அவர் மரணத்தில் தம் ஆத்துமாவை ஊற்றினார்". "தம் ஆத்துமாவை பாவநிவாரண பலியாக அவர் ஒப்புக்கொடுத்தார்". "அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக்(வெகுமதி)கண்டு திருப்தியாவார்" –ஏசாயா 53:10–12.

ஒரு மனித ஆத்துமாவாகிய இயேசுவே மரித்தார், ஆனால் அவர் மரித்தோரிலிருந்து ஒரு உயரிய ஆத்துமாவாக எழுப்பப்பட்டார். அவர் ஏற்கனவே முன்னுரைத்தவாறு, அவர் பரத்துக்கேறி, தாம் முன்பிருந்த நிலையை, அதாவது ஆவிக்குரிய தளத்தை அடைந்தார். "அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்"(1பேது3:18) . மனிதனை மீட்கும் விலையைக் கொடுக்கும் மகத்தான நோக்கத்திற்காக மட்டுமேஅவர் மாம்ச சுபாவத்தை எடுத்தார்; மேலும் அவர் தன்னை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்ததன் மூலம் அந்த மீட்கும் விலையைக் கையளித்தபிறகு, பிதா அவரை

மகிமை ,கனம், தெய்வீக சுபாவத்திற்கு எழுப்பினார். தேவதூதர்கள், சகல துரைத்தனங்கள் மற்றும் அதிகாரங்களுக்கு மேலாக, எல்லாவற்றிற்கும் மேலாக அவரை தேவன் உயர்த்தினார். (பிலிப்2:9). பரிசுத்த பவுல் சொல்வதைப்போல் தம் உயிர்த்தெழுதலில் பரத்துக்கு ஏறின அவரே, பரலோகத்திலிருந்து பூமிக்குரிய நிலைமைக்கு முன்பு இறங்கியிருந்தார்.

இயேசுவின் உயிர்த்தெழுதலில் அவர் மிகவும் வித்தியாசமாக இருந்ததினால், இந்த பார்வையிலிருந்து, அவருடைய உயிர்த்தெழுதலுக்குப்பிறகு அவர் முன்பு செய்ததிலிருந்து முற்றிலும் வேறுபட்டவராக நடந்துகொண்டதை நாம் புரிந்துகொள்ள ஆயத்தப்படுகிறோம். அவரது உயிர்த்தெழுதலுக்குப்பிறகு, அவர் தோற்றமளித்தும், மறைந்தும் இருந்ததாக நாம் வாசிக்கிறோம். தம் சீஷர்களிடத்தில் தோன்றும் ஒவ்வொருமுறையும், சில வினாடிகளே அவர் தம்மைக் காண்பித்து, பின்பு அவர்களது பார்வையிலிருந்து மறைந்தார். இவ்வகையில் அவர் முன்பு ஒருபோதும் செய்திருந்ததில்லை. அவருடைய உயிர்த்தெழுதலுக்குப்பிறகு வெவ்வேறு சரீரங்களிலும், வெவ்வேறு வடிவங்களிலும், வித்தியாசமான ஆடைகளிலும் அவர் தோன்றினார். எம்மாவூசை நோக்கி நடந்துசென்ற இருவரிடத்தில் அந்நியனைப்போல் அவர் தோன்றினார். ஒரு வேறுபட்ட நபராக மட்டுமல்லாமல், வெவ்வேறான ஆடைகளில் அவர் தோன்றினார். ஏனெனில் அவரது ஆடைகள் படைவீரர்களிடையே பங்கிடப்பட்டிருந்தது.

அவர் மாம்சத்தில் கொலையுண்டு, ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டிருந்தது தற்போது தெளிவாகிறது. ஆவியாயிருந்த இயேசுவே சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வெவ்வேறு மனித வடிவங்களையும், ஆடைகளையும் அணிந்து, தம்மை வெளிப்படுத்தினார். யூதர்களுக்குப் பயந்து கதவுகளைமூடி சீஷர்கள் கூடியிருந்தபோது, இந்த ஆவிக்குரிய ஜீவியால் அங்கே வரமுடிந்தது, வந்தார். அவர்கள் முன்னிலையில் அவர் ஒரு சரீரத்தையும் உடைகளையும் உண்டுபண்ணி, உருமாறினார். சில வினாடிகளுக்குப்பிறகு, அவர்களுடைய பார்வையிலிருந்து மறைந்து, சரீரத்தையும் ஆடையையும் கலைத்துவிட்டார். அதே சமயத்தில், ஆவிக்குரிய ஜீவியான அவரோ காணப்படாதவராக இருந்தார். அவர் பரத்துக்கு ஏறிச்செல்வதற்கு முன்பு, நாற்பது நாட்கள் தம் சீஷர்களோடு இவ்வாறு இருந்தார், ஆயினும் அவர்கள் ஏழு வெவ்வேறு சந்தர்ப்பங்களில், ஒரு சில நிமிடங்கள் மட்டுமே அவரைக் கண்டிருந்து, மற்ற நேரங்களில் அவரைக் காணாதிருந்தனர்.

யூத சீஷர்களுக்கும்,அப்போதிலிருந்து கர்த்தருடைய பின்னடியார்களாகும் அனைவருக்கும் இரண்டு பெரிய பாடங்களை போதிப்பதற்கு, அந்த 40 நாட்கள் மிகவும் அவசியமாயிருந்தது.

1. அவர் இனி மரித்தநிலையில் இல்லை, உயிரோடிருக்கிறார்

2. அவர் இனியும் மனிதரல்ல, ஒரு ஆவிக்குரிய ஜீவியாயிருக்கிறார். ''கர்த்தரே அந்த ஆவி'' – 2கொரிந் 3:17.

**நம் கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம்**

நம்முடைய கர்த்தர் இனிமேலும் மாம்சத்துக்குட்பட்டவரல்ல, மாறாக பரலோக மகிமையுடன்கூடிய ஒரு ஆவிக்குரிய ஜீவி என்பதை பரிசுத்த பவுலின் சொந்த அனுபவங்களின் விளக்கத்தால் தெளிவாக உறுதிப்படுத்தப்படுகிறது. இயேசு மரித்தோரிலிருந்து எழுந்திருப்பதற்கு பன்னிரெண்டு அப்போஸ்தலர்களும் சாட்சியமளிக்கவேண்டியது அவசியம் என்று அவர் விளக்குகிறார். இறந்த இரட்சகர் மூலமாக தெய்வீக தயவின் நம்பிக்கையைப் பற்றின எந்த சுவிசேஷ செய்தியும் இருந்திருக்க முடியாது. கிறிஸ்து உயிர்த்தெழுந்திருக்கவில்லை– யென்றால், மேசியாவின் இராஜ்யத்தை எக்காலத்திலும் நிறுவக்கூடியவர் யார் ?திருச்சபைக்கு முதலாம் உயிர்த்தெழுதலில் பங்களித்து, அவரது பரலோக மகிமைக்கு பங்காளிகளாக அவர்களை மாற்றுபவர் யார் ? இதை எப்போதாவது அளிக்கக்கூடியவர் யார் ? கிறிஸ்து எழுந்திருக்காவிட்டால், மரித்திருக்கின்ற கோடிக்கணக்கான ஜனங்களை கல்லறையினின்று அழைத்து, இயேசுகிறிஸ்துவின் சமாதானத்தைப் பேசும் குரல் மூலமாக ராஜ்யத்திற்கு கீழ்ப்படிவதன்மூலம், நித்திய ஜீவனுக்கான வாய்ப்புக்களுக்கு அவர்களை யார் எழுப்புவார்கள் ?

''கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே''(1கொரிந்15:16–18) என்று இவையனைத்தையும் அப்போஸ்தலர் நம் மனதிற்கு வலுக்கட்டாயமாக எடுத்துரைக்கிறார். இயேசு மரித்தாலும் நிஜமாகவே உயிரோடிருக்கிறார் என்றும், மரித்தோரின் உயிர்த்தெழுதல் வெறும் சம்பிரதாயமே, தேவதிட்டத்தை நிறைவேற்றுவதற்கு தேவையற்றது என்றும் வேத ஆதாரமின்றி கூறுபவர்களுடைய கருத்துக்களை பரிசுத்த பவுல் எந்த வகையிலும் பகிர்ந்துகொள்ளவில்லை. மரித்தோர் எதையும் அறிவதில்லை, ஆகவே வருங்கால ஜீவியத்திற்கு அல்லது நம்பிக்கைக்கு, ஆசீருக்கு மரித்தோரின் உயிர்த்தெழுதல் முற்றிலும் அவசியமே என்பதே தெய்வீக போதனையாயுள்ளது.

கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்திருக்கிற உண்மையானது மரித்தவர்களை எழுப்பும் தேவ வல்லமைக்கான உத்திரவாதமாகும். கூடுதலாக, இயேசு இவ்வுலகிற்கு வந்த வேலையை நிறைவேற்றியதற்கான உத்திரவாதமாகவும் இது உள்ளது. அவர் தெய்வீகப் பிரமாணத்தை பூரணமாய் கடைப்பிடித்திருக்கவேண்டும் என்பதையும் இது நிரூபிக்கிறது. இல்லையெனில், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலுக்கு தகுதியானவராக இருந்திருக்கமாட்டார். மேலும் அவரது மரணத்தின் மதிப்பு, பயன் விளைவிக்கும் திறன், முற்பிதாவாகிய ஆதாமின் பாவத்துக்கான சரிக்கட்டுதலாகவும் உலகின்

பாவங்களுக்கான மீட்கும்பொருளாகவும் எவ்வாறு செயல்படுகிறது என்பதை கூடுதலாக இது நிரூபிக்கிறது.

**உயிர்த்தெழுதலுக்குப் பிந்தைய வெளிப்பாடுகள்**

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு தாம் அவரைக் கண்டதாக பரிசுத்த பவுல் கூறுகிறார். அவரிடத்தில் தோன்றின நம் கர்த்தரின் தோற்றம், நடுப்பகலின் சூரியப்பிரகாசத்துக்கும் மேலான பிரகாசம்போல் இருந்ததாக நமக்கு அவர் கூறுகிறார். அது தம் குணாதிசயத்தின்மீதும், தம் கண் பார்வை மீதும் பாதிப்பை ஏற்படுத்தினதையும், மகிமை நிறைந்த இயேசு அந்த ஒரு கணப்பொழுது பார்த்தது தம் பார்வையை அழித்துவிட்டதையும், பிற்பாடு தெய்வீக இரக்கத்தினால் பார்வை ஓரளவு திரும்பக் கிடைத்ததையும் அப்போஸ்தலர் நமக்குக் கூறுகிறார். இது இயேசு சீஷர்களுக்குக் காண்பித்த எட்டாவது தோற்றமாகும். அவற்றில் ஏழுமுறை மாம்சத்தில் அவர் தோற்றமளித்தார், ஒரு முறை சூரியப்பிரகாசத்துக்கும் மேலாக, மகிமையில் அவர் தோற்றமளித்தார். எல்லா சமயங்களிலும் அவர் ஒரே மாதிரியாக இருந்தாலும், வெளிப்பாடுகள் வித்தியாசமாயிருந்தன.

உயிர்த்தெழுந்தபிறகு இயேசு நாற்பது நாட்கள் மாம்சத்தில் தம்மை வெளிப்படுத்தியது, நீண்ட காலத்துக்கு முன்பாக அவர் லோகோஸ் நிலைமையில் வெளிப்படுத்தியதற்கு துல்லியமாக ஒத்திருக்கிறது. இவற்றில் ஒன்று, ஆபிரகாமிடத்தில் தம்மை வெளிப்படுத்தியது. அவர் ஆபிரகாமுடன் பேசினார், புசித்தார், ஆனால் கர்த்தரிடத்தில் பேசினதை ஆபிரகாம் அறிந்திருக்கவில்லை. அவர் மனித உருவத்திலும், சாதாரண உடையில் தோற்றமளித்ததால் ஒரு மனிதராக மட்டுமே அவரை எண்ணினர். அவர் அப்போஸ்தலர்களது பார்வையிலிருந்தும், சவுலின் பார்வையிலிருந்தும் மறைந்ததுபோலவே, ஆபிரகாமின் பார்வையிலிருந்தும் மறைந்தார். அவர் ஆபிரகாமிடத்தில் தோன்றியபோது, ஒரு ஆவிக்குரிய ஜீவியாக இருந்தார். அவரது உயிர்த்தெழுதலுக்குப்பிறகு அவர் தம்முடைய அப்போஸ்தலர்களிடத்தில் தோன்றியபோது, அவர் ஒரு ஆவிக்குரிய ஜீவியாக இருந்தார். இதற்கிடையில்தான் அவர் துன்பப்படும் நோக்கத்திற்காகவே மாம்சமாகி, அநீதருக்காக நீதிமானாக ஆனார்.

பாடுகளை நிறைவேற்றினபிறகு, நம் கர்த்தர் ஏன் மாம்சத்தில் இன்னும் இருக்கவேண்டும் என்பதற்கான வேறு எந்தக் காரணமும் இல்லை. பரலோகத்திலுள்ள மகிமையின் கர்த்தர் மாம்சமானவர் அல்ல, மனிதருமல்ல. அவர் அப்படி இருந்திருந்தால் அவர், ''தேவதூதர்களைவிட சற்று சிறியவராக'' இருப்பார். ஆனால் அவரது உயிர்த்தெழுதலில் தேவதூதர்களுக்கும் மேலாக உயர்ந்த ஸ்தானத்துக்கு ஏறியிருக்கிறார் என்று அப்போஸ்தலர் நமக்கு உறுதியளிக்கிறார்–பிலிப் 2:9–11 ; எபி 1: 3,4.

இயேசுவுக்கு ஒரு வடிவத்தில் இன்னொருவரைப்போலவும், ஒருவகையான ஆடையில் இன்னொருவரைப்போலவும் தோன்றுவது அவ்வளவு எளிதாக இருந்தது. அவர் பல்வேறு வடிவங்களில் தோன்றியிருந்ததால், அவர் மரித்திருக்கவில்லை என்றும், அவர் இன்னும் ஒரு மனிதராக இல்லை என்ற இரண்டு பாடங்கள் இதன்மூலம் பதியவைக்கப்படுகிறது. குறிப்பாக, பரிசுத்த தோமாவை நம்பவைக்க, காயங்களுடனான அவரது இரண்டாவது தோற்றம் குறிப்பிடத்தக்கது. அவசியமான எந்த செயல்விளக்கத்தையும் வழங்க அவர் தயாராக இருந்தார். ஏனெனில் அவரது உயிர்த்தெழுதலை அவரது சீஷர்கள் உண்மையில் நம்பாவிட்டால் அவர்களுக்கு முன்பாக இருந்த வேலையை செய்யமுடியாது, பெந்தெகொஸ்தே நாளின் பரிசுத்தஆவியைப் பெறவும் முடியாது. இயேசுவின்மீது விசுவாசம் வைப்பவர்களைத் தவிர வேறு யாருக்கும் பரிசுத்தஆவி வழங்கப்படவில்லை. அவர்கள் அவருடைய மரணத்தை பாவங்களுக்கான பலியாக ஏற்றுக்கொண்டு, தெய்வீக ஆசீர் இந்த இரட்சகர் மூலமே வரும் என்று அவரை நம்பினர். அவரே அவர்களை பரிசுத்தஆவியினால் ஜெநிப்பித்து தேவனுடைய புத்திரர்களாக தேவனோடு ஐக்கியங்கொள்ள அவர்களை மீட்டெடுத்தார்.

**கூடுதலான வேத ஆதாரங்கள்**

இயேசு மாம்ச ஜீவியல்ல, அதாவது அவர் இனியும் மனிதரல்ல என்பதற்கு கூடுதலான சான்று தேவைப்படுமானால், அந்த சான்றுகள், மாம்சமும் இரத்தமும் தேவராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை என்று அப்போஸ்தலர் உறுதியளித்த வார்த்தைகளிலும், சபையின் ஒவ்வொரு அங்கமும் கிறிஸ்துவின் ராஜ்யத்தில் பங்குபெறவும் அதற்குள் நுழைவதற்கும் முன்பாக, மாற்றமடையவேண்டும் என்பதிலும் சான்றுகள் காணப்படுகின்றன. இந்த மாற்றம் பூமிக்குரிய மட்டத்திலிருந்து அல்லது நிலைமையிலிருந்து அல்லது பூமிக்குரிய ஆத்துமாவிலிருந்து ஆவிக்குரிய நிலைமைக்கு இருக்கும். அவர் ஒரு ஆவிக்குரிய சரீரத்தைப்பெற்று ஒரு ஆவிக்குரிய ஜீவியாக, ஆவிக்குரிய ஆத்துமாவாக இருக்கிறார் என்பது வெளிப்படையாயுள்ளது. நம் கர்த்தருடைய சாயலுக்கொப்பாக வேண்டுமானால், நாம் எல்லோரும் மாற்றமடையவேண்டும் என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறார். ஆகவே நம் கர்த்தருக்கொப்பாக இருக்க, நம் மாம்ச சரீரம் ஆவிக்குரிய சரீரத்துக்கு இடங்கொடுக்க வேண்டும். திருச்சபையாரது உயிர்த்தெழுதலைப் பொருத்தவரை பரிசுத்த பவுலுடைய கருத்தும் இதற்கு உடன்படுகிறது. அவர் கூறுகிறார்; '' பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும், கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்''(1கொரிந்15:43–44).

இருப்பினும், பிலிப்பியர் 3:21 இல் இதே அப்போஸ்தலரால் முற்றிலும் மாறுபட்ட ஒரு விஷயம் நம் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. நம் கர்த்தராகிய இயேசு நம் அற்பமான சரீரத்தை, அவருடைய மகிமையுள்ள

சரீரத்துக்கொப்பாக உருமாற்றுவார் என்று அவர் அறிவிக்கிறார். இங்கு கொடுக்கப்படுகிற சிந்தனை, திருச்சபையின் தனிப்பட்ட சரீர அங்கங்களைப் பற்றியது அல்ல, ஒட்டுமொத்த சபையைப்பற்றினது. அப்போஸ்தலர் நமது பலவீன சரீரத்தைப்பற்றி ஒருமையில் பேசுகிறார் – திருச்சபையின் தலையாகிய இயேசு தம் மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் முன்பு, அவமானத்தை அனுபவித்திருந்தார் என்பதே இதன் கருத்து. திருச்சபையின் தலை 18 நூற்றாண்டுகளுக்கும் முன்பு உயர்த்தப்பட்டார், மகிமைப்படுத்தப்பட்டார். அப்போதிலிருந்து, அவரது நோக்கத்தை ஆதரித்த அனைவரும், ஒரு சரீரத்துடன் அல்லது கூட்டத்துடன், மனிதரால் புறக்கணிக்கப்பட்ட இழிவான சரீரமாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களைக்குறித்து அப்.பவுல் கூறுகிறார்;"உலகத்தின் குப்பையைப்போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப் போலவும்" (1கொரிந்4:13) நாம் எண்ணப்படுகிறோம். ஆனால் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், அவரது சரீரமாகிய திருச்சபையின் அவமானம் முடிவுறும். ஏனென்றால், கர்த்தர் முதலாம் உயிர்த்தெழுதலில் அவரது சரீரத்தை மகிமையுள்ளதாக மாற்றுவார். அதன்பிறகு, அது இனி நிந்திக்கப்பட்ட ஒரு திருச்சபையாகவோ அல்லது சரீரமாகவோ அல்லாமல் மகிமைப்படுத்தப்பட்டிருக்கும்.

–––––––

**R 5585**

# புதுசிருஷ்டிக்கான சோதனைகள் விசித்திரமானவை

# TEMPTATIONS PECULIAR TO THE NEW CREATION

"நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்" – எபிரேயர் 4 :15,16.

பரிசுத்த பவுல் நிஜமான ஆசாரியத்துவத்தைப் பற்றிப் பேசியிருந்து, ஆரோன் ஒரு முன்னடையாளமான ஆசாரியராக மட்டுமே இருந்தார் என்றும், லேவிய ஆசாரியத்துவம் பாவத்தை ஒருபோதும் நீக்கவில்லை என்றும், மேலான ஆசாரியத்துவம் அவசியம் என்றும், இந்த மேலான ஆசாரியத்துவம் மெல்கிசேதேக்கில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது என்றும், ஆகவே இயேசு, "மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றைக்கும் ஆசாரியராயிருக்கிறார்" என்று தேவன் அறிவித்ததாக காண்பித்தார். இயேசு பரலோகத்துக்குரிய பிரதான ஆசாரியராக இருந்தார், பூமிக்குரிய பிரதான ஆசாரியரல்ல. நம் கர்த்தர் பூமிக்குரிய ஆசாரியராயிராவிட்டால், எப்படி நம்மிடத்தில் அனுதாபப்படுவது என்று அறியாதிருப்பார் என்ற எண்ணம் எழக்கூடும். ஆனால் நம் மகா பிரதான ஆசாரியர் "எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டதால்" நம்மிடத்தில் முழு அனுதாபம் காட்டமுடியும் என்று அப்போஸ்தலர் நமக்கு உறுதியளிக்கிறார்.

உலகம் சோதிக்கப்பட்ட எல்லாவிதங்களிலும் நம் கர்த்தர் சோதிக்கப்பட்டார் என்று அப்போஸ்தலர் சொல்வதாக நாம் புரிந்துகொள்ளக்கூடாது. குடிகாரனுக்குரிய விநோத சோதனைகளை அவர் அடைந்திருக்கவில்லை. அவருடைய மனம் சமநிலையற்றதாக இருந்ததில்லை. நாம் சபையாக இருந்து சோதிக்கப்படுவதுபோலவே– நம்மைப்போலவே அவர் சோதிக்கப்பட்டார். நமது எஜமானரைப் போலவே புதுசிருஷ்டிகளாக, நாம் உலகத்தாரைப்போல் சோதிக்கப்படவில்லை. உலகத்திற்கு அதன் சொந்த வகைகளிலான சோதனைகள் உள்ளன. நாம் உலகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல. நாம் தேவஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட பிள்ளைகளாக சோதிக்கப்படுகிறோம். அவரிடத்திலான நம் உண்மைத்தன்மை, நமது விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றில் நாம் சோதிக்கப்படுகிறோம். நாம் மாம்சத்தில் இருக்கும்போது, விழுந்துபோன சந்ததியின் அங்கங்களாக, நம் சுபாவ மனப்பான்மையின் விதிகளில் நிச்சயமாக நாம் சோதனைக்கு ஆளாகிறோம், ஆனால் இவை புதுசிருஷ்டிகளுக்கான நம் சோதனைகளல்ல.

**உலகம் நம்மைப் புரிந்துகொள்ள முடியாது**

புது சிருஷ்டிகளாக நம் விசித்திரமான சோதனைகளைக் குறித்து உலகம் எதுவும் அறியாது. மனுக்குலத்தின் பொதுவான சோதனைகள் மற்றும் பலவீனங்களைப் பற்றி மட்டுமே அதற்குத் தெரியும். ஆனால் தேவனுடைய பார்வையில் நீதிமானாக்கப்பட்டவர்களாயிருந்து, அவரதுஊழியத்துக்காக பிரித்தெடுக்கப்பட்டிருக்கிற–வர்களாகிய நாம், நம் புதிய குறிக்கோள்களை நிறைவேற்ற விரும்புகிறோம். நாம் இனி உலகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல. உலகமும் மாம்சமும் மற்றும் பிசாசும் நம்மைத்திருப்பி, பழைய வழிகளுக்கு திரும்ப இழுக்கத் தூண்டுகின்றன. இந்த சோதனைகள் கர்த்தரிடத்திலான நம் விசேஷ உடன்படிக்கையின் உறவையும், நாம் என்னசெய்ய ஒப்புக்கொண்டோமோ, எப்படியிருக்க ஒப்புக்கொண்டோமோ அதையும் மறக்கச்செய்கின்றன. இவ்விஷயத்தில் நாம் குறிப்பாக சோதிக்கப்பட்டு, பரீட்சிக்கப்படுவதால் நாம் எப்பொழுதும் விழிப்புடன் இருக்கவேண்டும். நம் மாபெரும் தலையாகிய இயேசு, இவ்விதமாக நம்மைப்போலவே சோதிக்கப்பட்டார் என்று நாம் அறிவோம்.

இயேசு தம் சீஷர்களிடத்தில், தாம் எருசலேமுக்குச் செல்வதாகவும், அங்கு பிரதான ஆசாரியர்கள் மற்றும் வேதபாரகர் கைகளில் காட்டிக்கொடுக்கப்படுவேன் என்றும், அவர்கள் அவரை மரணத்துக்கு தீர்ப்பிட்டு, புறஜாதியாரின் கைகளில் ஒப்படைப்பார்கள் என்றும், அங்கு அவர்கள் அவரை பரியாசம் பண்ணி, வாரினால் அடித்து, சிலுவையில் அறைவார்கள் என்றும் சொன்னபோது, பரிசுத்த பேதுரு:

போதகரே, இவ்விதமாக நீர் பேசவேண்டாம் , இது எங்களை சோர்வுறச்செய்கிறது என்று கூறினார். உங்கள் மாம்சத்தைப் புசித்து, உங்கள் இரத்தத்தை பானம் பண்ணும் விநோதமான காரியங்களைப்பற்றி ஏன் பேசுகிறீர்கள்? கர்த்தாவே, இக்காரியங்களைப் பேசவேண்டாம்! இது உங்கள் பங்காக இராதபடிக்கு தேவன் தடைசெய்வார் என்றார்.

தங்கள் எஜமான் பேசுவதை, அவரால் தெரிந்தெடுக்கப்பட்ட 12 சீஷர்கள்கூட புரிந்துகொள்ளவில்லை. இயேசு இதற்கு; (பொதுவான பதிப்பில் கூறப்பட்டபடி முரட்டுத்தனமாக அல்ல)''எனக்குப் பின்னாகப் போ விரோதியே'' நீ என் எதிரியாகிக்கொண்டிருக்கிறாய் என்று கூறுனார். நான் செய்கிற வேலையை நீ தவிர்க்கச் செய்வாய். எனக்கு உதவுவதற்குப் பதிலாக நீ என்னை தடைபண்ணுகிறாய், ஏனெனில் உன் எண்ணங்கள் தேவனுடைய எண்ணங்களல்ல, மாறாக மனுஷனுடையவை என்று கூறினார் –மத் 16:21–23.

நமக்கு கருணைகாட்ட முயலும் அநேகரும் இவ்வாறே நம் நலன்களுக்கு சேவை செய்வதாக நினைத்து, பேதுருவைப்போல் செயல்படுகின்றனர். நாம் தேவபக்தியைக் குறித்து அதிகபட்சமாக சிந்தித்து முட்டாள்களாக இருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். நாம் நம் தந்தையின் அலுவலையே பிரதானமாக கொண்டிருக்கவேண்டும் என்பதை அவர்கள் உணர்வதில்லை. நம் எஜமானரைப் பின்பற்றும் கிறிஸ்தவர்களாக இவ்வகையான சோதனைத் தூண்டுதல்கள் நமக்கு வரும். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விசேஷ சோதனைக் கவர்ச்சிகள், கடுமையான ஒழுக்கக்கேடுகளை செய்வதற்கான சோதனைகள் அல்ல, இயேசுவுக்கு வந்த சோதனைகளும் இந்த வகையான சோதனைகள் அல்ல. ஆனால் சத்தியத்தை மறைத்து, மிகவும் சுவையாக இருக்கும் ஒன்றைக் கொடுக்கும் சோதனை அவருக்கு இருந்தது.

பெயர் சபையைச் சார்ந்த நம் நண்பர்களில் சிலர் நம்மைக் குறித்து கூறுவர்: நீங்கள் ஏன் சேரிப்பகுதிகளில் பணிசெய்வதிலும், அல்லது சமூக மேம்பாட்டுப் பணியிலும் ஈடுபடுவதில்லை என்று நம்மிடம் கேட்கலாம். நீங்கள் எப்பொழுதும் ராஜ்யம், ராஜ்யத்தைப் பற்றியே பேசுகிறீர்கள். தேவனுடைய தூதுவர்களாக ராஜ்யத்தைப் பற்றியும், தேவன் தம் பரிசுத்தவான்களுக்காக ஆயத்தம் பண்ணியிருக்கிற மகிமையான காரியங்களைப் பற்றியும், உலகிற்கான அவருடைய தீர்மானங்களைப் பற்றியும் மனிதர்களுக்கு சொல்லும் நோக்கத்திற்காகவே நாங்கள் இங்கு இருக்கிறோம். உலகைக் காப்பாற்றுவதில் மனித சேரி மேம்படுத்தல் முறைகள் தோல்வியடையும் என்பதை நாங்கள் அறிவோம். ஆனால் ராஜ்யம் அதைக் காப்பாற்றும். உலகிலிருந்தும் பெயர்க் கிறிஸ்துவ சபை ஜனங்களிடமிருந்தும் வெறுப்பைக் கொண்டுவரும் தேவ வசனத்தின் காரியங்களைப் பேசுவது மற்றும் செய்வதற்கு பதிலாக, மற்றவர்கள் பாராட்டக்கூடிய ஒன்றைச் செய்வதே சோதனையாகும். பதிப்பாசிரியரின் நண்பர்கள் அவரிடத்தில் கூறினர்; ''நீங்கள் செய்வதைப்போல் பேசவில்லையென்றால், நீங்கள் எழுதுவதுபோல் எழுதினால் அநேக ஜனங்கள் உங்கள் பேச்சைக் கேட்பார்கள். நீங்கள் கொஞ்சம் வித்தியாசமாகப் பேசுவீர்களானால் நீங்கள் பிரபலமாவீர்கள்''உங்கள் பிரசங்கங்களில் தெய்வ பக்தியைக் குறித்து அதிகமாய்ப் பேசுகிறீர்கள். ஆம்! ஆனால் தேவ வசனத்தையும், குணாதிசயம் மற்றும் திட்டத்தையும் அவர் தற்போது திருச்சபைக்கு தருகிற அழைப்பையும் குறித்து அறிவுறுத்துவதற்கு பேசுகிறோம், எழுதுகிறோம் என்று பதிலளிக்கிறோம்.

**எஜமானின் சோதனைகளுடைய தன்மை**

ஒருவேளை அவரது சிந்தையில், இப்போது ஒரு எளிதான வழியை எடுத்துக்கொள்ளுங்கள் என்ற இந்த ஆலோசனை குருவின் முன்பாக வைக்கப்பட்டிருக்கலாம். சுட்டிக்காட்டப்படுகிறதாகத் தோன்றுகிற இந்த வழி மிகவும் கொடூரமானதாக காணப்படுகிறது, தேவனிடம் சென்று; இத்தனை யுகங்களாக உண்மையுள்ளவனாக இருந்துவரும் எனக்கு, இத்தகைய நடத்துதலுக்கு ஆளாகவேண்டியது சரியாகத் தெரியவில்லை என்றும், உண்மையுள்ள மகனை மிகவும் விசித்திரமான வழியில் நடத்துவதாகிறது என்றும், இதற்கு எந்த நல்ல காரணமும் இருக்கமுடியாது, இதனால் எதையும் ஆதாயமாக்கமுடியாது என்றும் சொல்லுங்கள். தேவனால் ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்த முடியாதா என்று கேளுங்கள். அவர் இந்த விஷயத்தில் மிகைப்படுத்தவில்லையா என்றும் அவரிடம் கேளுங்கள்.

அவ்வாறே, அவருடைய பின்னடியார்களாக நமக்கும் சில சமயங்களில் இதுபோன்ற ஆலோசனைகள் மனதில் எழலாம். ஆனால் முறுமுறுப்பும், கலகத்தின் ஆவியும் நாம் சரியான மனப்பான்மையில் இல்லை என்று நிரூபிக்கும். அது, நாம் ஒருக்காலும் நம் சித்தத்தை கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுக்கவில்லை அல்லது அதை திரும்பப் பெற்றுள்ளோம் என்றும் அவரிடத்திலான நம்பிக்கையில் குறைவுபட்டுள்ளதையும் நிரூபிக்கும். அத்தகைய எந்தவொரு சோதனையையும் தேவனுடைய பிள்ளை உடனடியாக எதிர்க்கவேண்டும்.

நம் போதகரை கைதுசெய்ய வந்த படைவீரர்கள் மற்றும் அதிகாரிகளிடமிருந்து பாதுகாக்க பரிசுத்த பேதுரு முயன்றபோது, முடிவு என்னவாயிருக்கும் என்று அறிந்திருந்தாலும் இயேசு : "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ..'' (யோவா18:11)என்று கூறினார். தனது எதிரிகள் தன்னை அழைத்துச்செல்வதைத் தடுக்க தனது உயர்ந்த வல்லமையைப் பயன்படுத்தும் எந்த சோதனைக்கும் அடிபணியவேண்டும் என்று அவர் ஒரு கனம்கூட சிந்திக்கவில்லை. அவர்கள் அனைவரும் பின்வாங்கி, தரையில் விழுந்தபோது, அவர் அத்தகைய வல்லமையை கொண்டிருப்பதை அவர்களுக்குக் காட்டினார். இவ்வாறு அவர் தன் உயரிய வல்லமையைப் பிரயோகிக்க

தேர்ந்தெடுத்திருப்பாரானால், அவர்களைக்காட்டிலும் நிகரற்ற பலத்தை பெற்றிருப்பதையும், அவர் கட்டாயமாக அடிபணிய வேண்டியதில்லை என்றும், ஆனால் உண்மையில் அவர் தாமாக முன்வந்து மரணத்திற்கு தன்னை ஒப்புவித்தார் என்பதையும் அவர் வெளிப்படுத்தினார். இது : "ஒருவனும் அதை(என் ஜீவனை) என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான், நானே அதைக் கொடுக்கிறேன்–(யோவான்10: 17,18) என்ற அவருடைய முந்தைய பிரகடனத்தின் ஒரு செயல் விளக்கமாயிருந்தது. இதிலிருந்து தப்பிக்கவோ அல்லது தனது துன்பங்களை குறைக்கவோ அவர் தனது மாம்சத்திலிருந்து வரும் எந்த வேண்டுகோளுக்கும் அடிபணிய உறுதியாக மறுத்துவிட்டார். "எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருந்தார்"(எபிரே4:15).

நாம் சிலசமயங்களில் பலவீனமடையக்கூடும், நாம் குறைவுபடக்கூடும்–குறைவுபடுகிறோம். மகிமை நிறைந்த தரநிலையில் முழுமையாக இணங்கி நடக்க நம்மால் முடியாது. கிறிஸ்துவோ பாவமில்லாதவராக இருந்தார். நம் சரீரத்திலோ பாவம் மிகுதியாக இருக்கிறது, அவருக்கு இல்லாத பலவீனங்கள் நமக்குண்டு. ஆனால் நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டுமானால், நாம் ஜெயங்கொள்ளவேண்டும். இறுதிவரை ஜெயங்கொண்டவர்களாக நம்மை நிரூபிக்கவேண்டும். நான் மிக கடினமாக முயற்சித்தாலும் இயேசு ஜீவித்ததுபோல் என்னால் ஜீவிக்கமுடியாது, இவ்வளவு பரிபூரணமான ஒரு தரநிலையை ஏற்படுத்துவதன் பயன் என்ன ?என்று நமக்குநாமே சொல்லிக்கொள்ளக்கூடாது. ஆனால் அதில் பயன் இருக்கிறது; அந்த தரநிலைக்கு முடிந்தவரை நெருங்கிவர நாம் ஊக்கமாய் போராடவேண்டும். இந்த மகிமையான மாதிரியை எப்போதும் நம் முன்வைத்திருப்பதன்மூலம், நமது தரநிலை குறைவாக இருக்குமானால் நம்மால் பரிபூரணத்தை நெருங்கிவரமுடியும். நாம் நுழைந்திருக்கிற இந்த பந்தய சாலைக்குள் பரிசை ஜெயிக்க நாம் எதிர்பார்க்கிறோமென்றால், இந்தப் பரிபூரண தரத்தையே இலக்காக கொண்டிருக்கவேண்டும்.

இயேசு பாவம் செய்திருந்து எந்தவகையிலும் குறைவுபட்டிருந்தாரானால், அது முழுமையான தோல்வியைக் குறிக்கும். அவருக்கு ஒருபோதும் உயிர்த்தெழுதல் இருந்திருக்காது. யூத பிரதான ஆசாரியன், இரத்தத்துடன் திரைக்குள் பிரவேசித்ததில் இது மாதிரியாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. பிரதான ஆசாரியன் அவரது பலிகளை செலுத்துவதில் நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு அறிவுரையையும் பின்பற்றவில்லையென்றால், திரைக்குள்ளாக மரிக்க நேரிடும். இயேசு கெத்செமனேயில் இதற்காகவே வியாகுலப்பட்டார்; "...தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணினார்"(எபிரே5:7). மரணத்திலிருந்து காப்பாற்றும்படியாக அல்ல, உயிர்த்தெழுதலின்மூலம் மரணத்திலிருந்து இரட்சிக்கும்படி விண்ணப்பித்தார். அவருடைய விண்ணப்பம் கேட்கப்பட்டு, பலப்படுத்தப்பட்டார், தேற்றப்பட்டார் என்று வேதப்பதிவு கூறுகிறது(லூக் 22:39–45). அவர் எந்த நிபந்தனைகளையும் மீறவில்லை என்றும், அதனால் அவர் நித்திய மரணத்திற்குள் செல்லமாட்டார் என்றும் பிதாவின் உறுதிமொழி அவருக்குக் கிடைத்தவுடன், இனி அவருக்கு வரக்கூடிய வேறு எந்த துன்ப அனுபவத்தையும் அடைவதில் அவர் திருப்தியடைந்தார்.

**அனுதாபமுள்ள நமது பிரதான ஆசாரியர்**

நமது பிரதான ஆசாரியர் சோதிக்கப்பட்டு, துன்புற்றார் என்ற உண்மையிலிருந்து, அவர் குளிரானவரோ, அக்கறையற்றவரோ அல்ல என்பதை நாம் அறியலாம். அதற்கு மாறாக, அவர் பரிவிரக்கம் நிறைந்தவர், மிகப்பெரிய அனுபவமுடையவர்(எபிரே2:18; 5:8). ஆகவே நமக்கு சோதனைகள் வரும்போது நாம் என்னசெய்யவேண்டும் ? நம் மகா பிரதான ஆசாரியரிடம் நாம் வரவேண்டும், நாம் பரலோக கிருபாசனத்திற்கு வரும்போது, தைரியத்துடன்(அல்லது, சரியாக மொழிபெயர்க்கப்பட்டால் திடமனதுடன் , சந்தேகத்துடன் அல்ல) வரலாம். அங்கு நம்மை சந்திப்பவர், நம் ஒவ்வொரு துக்கத்திலும், தேவையிலும், நம் ஒவ்வொரு சோதனையிலும் முழுமையாக அனுதாபம் காட்டுவார் என்பதை அறிந்துகொள்ளலாம்.

நாம் மனதார பாவம் செய்திருக்கவில்லையென்றால், நம் பாவங்கள் சரீரத்தின் அபூரணத்தால் ஏற்பட்டிருக்குமானால், அந்த நேரத்தில் நாம் அதை ஜெயங்கொள்ளவும், மாம்சத்தை சரியாகக் கட்டுப்படுத்த முடியாமற்போனால், நம் விழுந்துபோன மனித சுபாவத்தின் பலவீனங்கள் அனைத்தையும் கர்த்தர் புரிந்துகொள்வார், நாம் மண் என்பதை அவர் நினைவுகூர்கிறார் என்றறிந்து, தைரியத்துடன் கிருபாசனத்தண்டை நாம் வரலாம்(சங் 103: 13,14). நம் சொந்த பலவீனங்களைப் பொருத்தவரையில், நம்மைநாமே சரியாக நிதானிக்கமுடியாது என்று பரிசுத்த பவுல் கூறுகிறார். "நான் உங்களாலேயாவது, மனுஷருடைய நியாயநாளின் விசாரணையினாலேயாவது தீர்ப்பைப்பெறுவது எனக்கு மிகவும் அற்பக் காரியமாயிருக்கிறது. நானும் என்னைக்குறித்து தீர்ப்பு சொல்லுகிறதில்லை... என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தர்" என்று அவர் கூறுகிறார்(1கொரிந் 4:3,4). ஏற்ற சமயத்திலான ஊக்கத்தொகையை எப்படி அளிப்பது என்று அவர் அறிவார். ஆகவே ஜெபத்தில் அவரிடத்தில் நெருங்கி, அவருடைய வாக்குறுதிகளை மன்றாடுவதில் நாம் தயங்காதிருப்போமாக. நாம் அவருக்கு உண்மையாக இருக்க உண்மையிலேயே போராடும்போது அதைப்பெறுவோம் என்று அறிந்து, கர்த்தருடைய இரக்கத்தைத் தேடுவோமாக.

நாம் அடைந்திருக்கும் இந்த எல்லா அனுபவங்களைப்பற்றி நம் பிதா அறிந்திருக்கிறார், மேலும் நம்மை மூடுவதற்கான ஏற்பாட்டை அவர் செய்தார். நாம் அபூரணராக இருந்தாலும் கிறிஸ்துவின் சரீரத்தின் உறுப்பினர்களாக உள்ளே வருவதற்காக, நம் கஷ்டங்களில் அவர் உதவிசெய்தார். நம் அபூரண சரீரங்களை நம்மால்

முழுமையாக கட்டுப்படுத்தமுடியாது என்பதை அவர் அறிவார். ஆனால் நாம் பலமடையும்போது அழிவுக்குரிய சரீரத்தை நம்மால் நன்கு கட்டுப்படுத்தமுடியும். புதிய சித்தம், பழைய சிந்தையைக் கீழ்ப்படுத்தி, மாம்சத்தை ஜெயிப்பதில் சிறந்த வெற்றி பெறவேண்டும். நாம் நம்மையும் நமது முன்னேற்றத்தையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும்; நாம் கிஸ்துவின் சாயலிலும், பழைய சுபாவத்தையும் அதன் தூண்டுதல்கள் மற்றும் மனப்பான்மைகளை கீழ்ப்படுத்தும் திறனிலும் அவ்வப்போது நம்முள் வளர்ச்சியைக் காண முடியாவிட்டால் , நாம் நம்மை ஜெயங்கொள்வோராக நிரூபிக்கிறோம் என்று உணரவோ அல்லது திருப்தியடையவோ கூடாது.

கர்த்தர் தேர்ந்தெடுத்திருக்கிறதைக் காட்டிலும் வேறு எந்த ஏற்பாடும் நமக்கு இவ்வளவு நல்லதாக இருந்திருக்காது. நம்முடைய பலவீனங்களும் குறைபாடுகளும் நம்மீது சுமத்தப்பட்டுள்ளன; ஆனால் அவை தவிர்க்கமுடியாததாகவோ அல்லது அவற்றோடு எந்த துணிகரமும் தொடர்புபடுத்தப்படாமலிருந்தால், அவை அனைத்தையும் மன்னிக்கக்கூடிய ஒரு வழியை நாம் அடையும்படி தேவன் நமக்கு வழங்கியுள்ளார். தேவபிள்ளையினிடத்தில் எந்த அளவிலாவது துணிகரம் இருக்குமானால் அது அடிகளால் பரிகாரம் செய்யப்படவேண்டும். நாம் நம்மையும், நம் எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்களை உன்னிப்பாக ஆராய்ந்தால் அல்லது நிதானித்துப் பார்த்தால், நம் தவறுகளை சரிசெய்ய, கர்த்தரிடமிருந்து குறைவான தீர்ப்பும் சிட்சையுமே நமக்கு தேவைப்படும். நமது பொருத்தனைகளைக் கடைப்பிடிப்பதில் நாம் எந்த வகையிலும் அலட்சியமாக இருந்தோம் என்பதை நாம் உணர்ந்தால், எந்நேரத்திலும் ஏதோ ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் நாம் தளர்வாக இருந்தோம் என்று எண்ணுவோமானால், நாம் உணரும் சில தண்டனைகளை நம்மீது சுமத்திக்கொள்வது உதவியாயிருக்கும். நாம் ஜெபத்தில் ஊக்கத்தோடு கர்த்தரிடம் சென்று மன்னிப்பு கேட்டு, வருங்காலத்தில் அவரது கிருபையால் அதிக விழிப்புள்ளவனாய் இருக்க போராடுவேன் என்று அவரிடத்தில் வாக்குறுதி அளிக்கவேண்டும். இவ்வழியில் நாம் அன்றாடம் நம்மைநாமே ஆராய்ந்துபார்க்கவேண்டும், எந்தத் தோல்வியையும் இலேசாக எண்ணி ஒருபோதும் கடந்துசெல்லக்கூடாது. நமது இரக்கமுள்ள பிரதான ஆசாரியர், நமது பலவீனங்களைக்குறித்து பரிதாபப்படுகிறார் என்பதை உணர்தல் எவ்வளவு அருமையானதும், ஆறுதலளிப்பதுமாயுள்ளது! இருப்பினும், இந்த அறிவின் காரணமாக, நாம் ஒருபோதும் நமது விழிப்புணர்வை தளர்த்தவோ, அல்லது அவருடைய இரக்கத்தை பயன்படுத்திக்கொள்ளவோ கூடாது. ஆனால் நாம் விரும்பும் அனைத்தையும் செய்ய நம் இயலாமையை உணர்ந்தவுடன், உடனடியாக நாம் செல்லக்கூடிய கிருபாசனம் நமக்கு இருப்பதில் நாம் சந்தோஷமடைகிறோம். மேலும் நாம் பின்வாங்கமாட்டோம் என்று அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

------

## R 5577

**<u>என் பிரசன்னம் உன்னுடன் செல்லும்</u>**

**MY PRESENCE SHALL GO WITH THEE**

சர்வ வல்லமையுள்ள தேவனே,
வானத்திற்கும் பூமிக்கும் கர்த்தரே,

ஒவ்வொரு கோளத்தின் மையமும் ஆதாரமுமாயிருப்பவரே,

தூரத்தில் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் கர்த்தரே,

உமது கரங்கள் உலகங்களின் எடையைத் தாங்கினாலும்,

ஒரு குருவி தலையில் விழும்போது கவனிக்கவேண்டிய அளவுக்கு பகலோ இரவோ பரபரப்பாக இல்லை;

உம் கண்களோ உம் ஒவ்வொரு குழந்தையையும் பாதுகாக்கின்றன

இது அற்புதமான சிந்தனை!

ஜீவனைக்காட்டிலும் மேலாக உம்மை நேசிப்போரின் பாதையை,

உம் பாதுகாக்கும் தூதர்கள் தினமும் வடிவமைக்கின்றனர்;

நித்திய ஜீவனுக்கு அழைத்துச்செல்லும் வழியில்,

அவர்களை வழிநடத்தும் அவர்களது சிட்சையின் பிரம்பு ;

உம் குழந்தை தேவையான நேரத்தில் உம்மிடம் உதவி கேட்கும்போது,

நீர் ஒருபோதும் உறங்கவோ அயரவோ மாட்டீர் என்பதை அறிய,

உம் பிரசன்னம் எப்போதும் அருகில் இருப்பது

எவ்வளவு இனிமையான நினைவு !

ஓ, எந்த வேற்றுமையின் நிழலும் இல்லாதவரே,

மாறாதவரே, அனைவரும் விசுவாசமற்றவராக நிரூபித்தாலும்,

ஆம், பூமியும் வானங்களும் விலகிச்சென்றாலும்,

விசுவாசத்தினால் உமது கையைப் பற்றிக்கொள்கிறோம்;

எங்கள் சோர்வுற்ற இருதயங்களை இளைப்பாற நாங்கள் உம்மீது வைக்கிறோம்,

நீர் ஒருபோதும் கைவிடமாட்டீர் என்றும்,

உம் பார்வையில் என்றென்றும் விலைமதிப்பற்றோராய் இருப்போம் என்றும் உறுதியளிக்கிறோம்!

-------------